Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸ்ரீ ஆவணி மீ 25 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 15 (10 — 09 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 246

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

● தமிழ்நாட்டில் இருந்து புறப்பட்ட 16 பேர் எங்கே?

## கோடிக்கரையில் ஏழு சடலங்கள்! யாழ்ப்பாண மக்களுடையனவா?

சென்னை செப். 10 பாக்குநீரிணைக் கடலில் காணாமற் போனதாக அஞ்சப்படும் படகு ஒன்றில் பயணம் செய்த 16 இலங்கைத் தமிழ் அகதிகளில் 7 பேரின் சடலங்கள் வேதாரணியம் கோடிக்கரை அருகே கண்டு பிடிக்கப்பட்டன.

மிகுதிப் பேருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. இவர்களும் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இறந்தவர்களின் உடைமைகள் கோடிக்கரை அருகில் கரை சேர்ந்தன.

சென்ற 2 ஆம் திகதி 5 படகுகளில் இலங்கைத் தமிழ் அகதிகள் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர்.

அவற்றில் இரண்டு படகுகள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன. புயற் காற்றுக் காரணமாக 2 படகுகள் கோடிக்கரை திரும்பிவிட்டன. ஐந்தாவது படகுக்கு என்ன நடந்தது என்பது இன்னும் தெரியவில்லை.

தற்போது வேதாரணியம் கோடிக்கரை அருகே கண்டுபிடிக்கப்பட்ட சடலங்கள் இப் படகில் சென்றவர்களுடையவையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (இ-எ)

முச்சந்திமுரளி



அவை செய்த அமர்க்களம் என்ன, புரிந்த அடாவடித்தனங்கள் என்ன, இப்ப ஒரு காவலும் தேவைப்படுகுது பாக்கையிலேயே...!

## ஸ்ரீலங்காகடற்படைக்கு இந்திய இராணுவம் தரும் பாதுகாப்பு

ஊர்காவற்றுறை, செப். 10

ஊர்காவற்றுறைகடைவிதிக்கு மறுகரையில் அமைந்திருக்கும் ஸ்ரீலங்கா கடற்படை முகாமில் தங்கியிருக்கும் கடற்படையினர் தங்கள் தேவைக்கான பொருள்களைக் கொள்வனவுசெய்வதற்கு ஊர்காவற்றுறைக்கு வரத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு வரும் அவர்களுக்கு ஊர்காவற்றுறையில் முகாமிட்டுள்ள இந்தியஇராணுவத்தினர் பாதுகாப்பு அளிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா கடற்படையினர் இக்கரைக்கு வரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வாடகைக் கார் சாரதி கொலை

வவுனியா, செப். 10

வாடகைக் கார் சாரதியான உரிமையாளர் ஒருவர், அவரது காரின் உள்ளே புதன்கிழமை காலை சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

''அனைத்து இயக்கப் போராளிகளையும் சமூக விரோதக் கும்பல்கள் எனக் காரணம் காட்டி அழிக்கின்ற இனவிரோதி எல். ரீ. ரீ. ஈ க்கு தகவல் பரிமாறிய குற்றத்திற்காக இத்தண்டனையை வழங்குகின்றோம்'' என்ற குறிப்பு ஒன்றும் காருக்குள் காணப்பட்டது.

வவுனியா வாடிவீட்டுக்கு எதிரில் உள்ள சிறு ஒழுங்கையில் கைவிடப்பட்ட நிலையில் கார் சடலத்துடன் கண்டு பிடிக்கப்பட்டது.

சுப்பிரமணியம் குண

[6ஆம் பக்கம் பார்க்க]

### பொலீஸ் கார்களும் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், செப். 10

இந்திய அமைதிகாக்கும் படையினரால் பொலீஸ் கார்கள் தற்பொழுது யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

காரினுள் இருப்போரை வெளியில் இருப்

(6ஆம் பக்கம் பார்க்க)

★ சித்திரவதையால் உளவியல் பாதிப்புற்ற

# தமிழ் இளைஞருக்கு சிகிச்சை தர விசேட வைத்தியப் பிரிவு

## யாழ் மாவட்டத்தில் நிறுவ பூர்வாங்க ஏற்பாடுகள்

### வெளிநாட்டிலிருந்து வைத்திய நிபுணர்

— அலுவலகச் செய்தியாளர் கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 10

ஸ்ரீ லங்கா ஆயுதப்படையினரின் தடுப்பு முகாம்களில் இருந்த வேளை, சித்திரவதை செய்யப்பட்டதால், பெரும் எண்ணிக்கையான தமிழ் இளைஞர்கள் உளவியல்ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களின் எதிர்கால நன்மையைக் கருதி அவர்களுக்கு விசேடமானதும் நவீனமானதுமான சிகிச்சைகளை அளிப்பதற்காக, யாழ் மாவட்டத்தில் விசேட உளவியல் வைத்தியப் பிரிவு ஒன்று நிறுவப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப வேலைகள் இப்போது நடந்து வருகின்றன. கத்தோலிக்க மதகுருமார் இவ்விடயத்தில் முன்னின்று உழைக்கிறார்கள். பல வெளிநாடுகள் தேவையான நிதி உதவியை வழங்க முன்வந்திருப்பதாகவும் அறிய வருகிறது

உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க பிரான்ஸிலிருந்து விசேஷ வைத்திய நிபுணர்களும் வரவழைக்கப்படுவர்.

உத்தேச விசேட வைத்தியப் பிரிவு சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படும்.

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட, வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சித்திரவதைகளுக்கும் இம்சைகளுக்கும் ஆளாகி உளரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக உள்ளது. அவர்களுக்குச் சிகிச்சை அளித்துப் புனர்வாழ்வு தருவது அவசியம்.

பாதிக்கப்பட்ட இளைஞர்களில் பலர் பொது வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்குத் தயக்கம்காட்டி வருகின்றனர்.

அதனால் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவென்றே தனியான

(6-ம்பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்குஇணைப்பு மாநில சபைக்குள் முஸ்லிம்களுக்கு தனிப்பிரிவு

### நாளைய சந்திப்பில் வலியுறுத்தப்படும்

கொழும்பு, செப். 10

கிழக்கு மாகாணத்தில் உள்ள பெரும் பான்மை முஸ்லிம் பகுதிகளை இணைத்து உப அரசியல் நிர்வாகப் பிரிவு ஒன்று வடக்கு-கிழக்கு இணைந்த மாநில சபைக்குள் அமைக்கவேண்டும்.

இப்படி கிழக்கு மாகாண முஸ்லிம் எம். பி. க்கள் நாளை வெள்ளி ஜனாதிபதியுடன் நடத்தும் சந்திப்பில் வலியுறுத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் தற்போது முஸ்லிம்கள் 32 சத விதமாக உள்ளனர்.

இந்த விகிதாசாரம் கல்வி, காணிக்குடியேற்றம், தொழில் வாய்ப்பு ஆகியவற்றில் தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்பதற்கு உத்தரவாதம் தேவை என்றும் இச் சந்திப்பின் போது முஸ்லிம் பிரமுகர்கள் வலியுறுத்துவர் என்

[6ம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

10-09-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:-
7.33 முதல் 9.03 வரை
ராகுகாலம்:-
1.33 முதல் 3.03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### யாழ் நகரில் கூல்பாரில் கொள்ளை

குருநகர், செப். 10

கிறீஸ் கத்தி, துப்பாக்கியுடன் சைக்கிளில் வந்த இருவர் யாழ்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதப் படைப் பிரிவு எதுவும் கலைக்கப்படமாட்டாது

### அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு, செப். 10

ஆயுதப் படைப் பிரிவுகள் ஒன்றுமே கலைக்கப் படமாட்டா.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று அறிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இருந்து வாபஸ் பெறப்பட்ட படையினர் நாட்டின் ஏனைய பகுதிகளில் பணி புரிய அமர்த்தப்படுவர்.

நாட்டுக்காக உயிர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## எதுவித கட்டுப்பாடுமின்றி இந்திய விமானங்கள் இலங்கை வந்து செல்கின்றன

### சிறிமாவோ குற்றச்சாட்டு

கொழும்பு, செப் 10

இந்திய விமானங்கள் எதுவித கட்டுப்பாடும் இன்றி இலங்கைக்கு வந்து போகின்றன. விஸாஇன்றி இங்கிருந்து தமிழர்கள் அந்த விமானங்களில் உலக நாடுகளுக்குத் தாம் நினைத்தபடி சென்று திரும்புகின்றனர்.

சிங்களவர்களினால்படிப்பதற்குக் கூட விஸா இன்றி வெளிநாடு செல்ல முடியவில்லை.

இப்படிச் சொன்னார் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றி விளக்கும் பொதுக்கூட்டம் ஒன்று ஹோமகமவில் நடத்தப்பட்டது.

அக் கூட்டத்தில் சுதந்திரக்கட்சித் தலைவர்கள் பேசினர்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

இந்தியா விரும்பியபடி இலங்கையின் வெளியுறவுக் கொள்கைகள் வகுக்கப்பட்டு உள்ளன.

சுதந்திரக் கட்சி அரசு கடைப்பிடித்து வந்த

[6ஆம் பக்கம் பார்க்க]

## கொலைகள் தொடர் கதையா?



யுத்தம் ஓய்ந்து விட்டது. ஆனால் யாழ்ப்பாணம் கொலைக்களமாகவே தொடர்கிறது.

அடிப்படை மனித உணர்வும், இரக்க சுபாவமும், கருணையும் அறவே இல்லாதவர்களாக யாழ்ப்பாண மக்களில் சில சமூக விரோதிகள் மாறி வருகிறார்கள்.

மனித உயிரின் மதிப்பைக் குறைக்கும் அளவுக்குக் கொலைகளைச் செய்து வருகிறார்கள்.

[illegible] கடையைக் கொள்ளை அடிப்பதற்காக கடை உரிமையாளர் ஒருவர் யாழ். நகரின் மத்தியில் எவ்வளவு கொடூரமான, மிருகத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதைப் படத்தைப் பார்த்தாலே புரிகிறதல்லவா?

கடைக்குள் துயின்று கொண்டிருந்த அவரைத் தூக்கி வந்து, கயிற்றால் கட்டி வைத்து, படுக்கை விரிப்பால் (பெட் சீட்டால்) கழுத்தை இறுக்கி ஆயுதம் இல்லாமலே கொலை செய்திருக்கிறது ஒரு சமூக விரோதக் கும்பல்!

இவர்களைக் கண்டுபிடித்து மக்களைக் காப்பாற்ற எவருமில்லையா? தமிழ் மண் இப்படியே மரண பூமியாகத் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டுமா?

## உதயனில் விளம்பரம்

உதயன்---சஞ்சீவி பத்திரிகைகளில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிப்பது இப்போது மிக இலகு.

யாழ் பஸ் நிலையத்துக்கு அருகே, 207, மின்சார நிலைய வீதியில், ஷப்ரு அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் உதயன் கருமபீடத்தில் உங்கள் விளம்பரங்களைக் கையளியுங்கள்.

கைலாசபிள்ளையார் கோவிலடியில் உள்ள உதயன் பணிமனைக்கு செல்வது சிரமம் என்று நினைத்துத் தயங்கிய உங்கள் வசதிக்காகவே இந்த ஏற்பாடு.

★ உதயன் கருமபீடம் ★
ஷப்ரு அலுவலகம்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையி[illegible]ரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★ ★★★★
★இன்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★ ★★★★

**மணப்பந்தல்**

யாழ் இந்துமத B.Sc. எஞ்சினியர் யாழ்ப்பாணத்தில் தொழில்புரியும் (31 வயது) அவரின் சகோதரி(வயது29) A/L படித்தவருக்கும் மாற்று விவாகம் செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ளவும் ABCDE விவாகப் பொருத்துனர், 1,குமாரசாமி றோட், கந்தர்மடம். (1666)

**வாடகைக்கு**

புடைவை, கூல்பார், இரும்புக் கடை, பல சரக்குக்கு வாடகைக்கு கொடுக்கப்படும். நேரில் வந்து சந்திக்கவும். கடையின் நீளம் 30 அடி அகலம் 13 அடி. பிளேட் கட்டிடம், கருச்சுகேற், பரணி ஸ்ரோர்ஸ், கே, கே. எஸ், றோட், கொக்குவில். (1671)


# யாழ்ப்பாணத்தில் வீதிப் போக்குவரத்து நெருக்கடி பெருமளவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணத்தில் வாகனப் போக்குவரத்து நெருக்கடி பெருமளவு அதிகரித்திருக்கிறது.

காலை வேளைகளில்— பாடசாலை மற்றும் அலுவலகங்கள் ஆரம்பமாகும் நேரங்களிலும் — வீதிகள் நிறைந்து போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதைக் குடா நாட்டில் உள்ள பிரதான வீதிகள் எங்கும் காணமுடிகின்றது.

இந்நேரங்களில் உள்ளூர் சேவைகளில் ஈடுபடும் பஸ்களிலும் மிகுந்த நெருக்கடி காணப்படுகின்றது.

இதனால் உள்ளூர் சேவையில் ஈடுபடும் பஸ்கள் இந்நேரங்களில் இடைத் தரிப்பிடங்களில் நிறுத்தப்படுவதில்லை.

இதனால் பயணிகள் குறிப்பாக பாடசாலை மாணவர்கள், அலுவலகங்களில் கடமையாற்றுவோர் மிகுந்த கஷ்டமடைகின்றனர். (உ)

## நீங்கள் தனிநாடு கேட்டால் எம்.ஜி. ஆரும் கேட்பார் என்கிறார் இந்திய அதிகாரி

வடமராட்சி, செப். 10

நீங்கள் தனி நாடு கேட்டால் எம். ஜி ஆரும் தனித் தமிழ்நாடு கேட்பார்.

வடமராட்சி இந்தியப் பாதுகாப்புப் படைப் பொறுப்பாளர் லெப்டினட் கேர்ணல் அட்வாணி புலோலியில் வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தாராம்.

மறியல் போராட்டம் ஆரம்பமாக இருந்த வேளை கேர்ணல் அட்வாணி அந்த இடத்துக்கு வந்தார்.

புலிகள் பிரமுகர் எஸ். எம். அப்பா தமிழ் மக்களுக்குத் தற்போதுள்ள துன்பங்களையும் அதை அவர்கள் துடைப்பதற்குத் தமிழீழத்தைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் அவரிடம் விளக்கிக் கூறினர்.

அப்போதே நீங்கள் தனி ஈழம் கேட்டால் தமிழ் நாட்டில் எம் ஜி. ஆரும் கேட்பார் என்று இந்திய கேர்ணல் கூறினராம். [இ-160]

## அஞ்சலிக் கூட்டம்

சங்கானை, செப். 10

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தும் கூட்டம் செல்வன் துரைமணி தலைமையில் சித்தன்கேணிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்றது. (ஓ-29)

## குண்டுதயாரித்தவர் கைதானர்

கொழும்பு செப். 10

சக்தி மிகுந்த வெடி குண்டுகள் தயாரிப்பதில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் ஒருவரை பேலியகொடை பொலீஸார் கைது செய்தனர்.

கொழும்பு நகரின் முக்கிய நிறுவனங்கள், மற்றும் இடங்களைத் தகர்ப்பதற்குத் தேவையான குண்டுகளைத் தயாரிப்பதில் இந்த நபர் ஈடுபட்டிருந்தாராம். (இ-எ

## இவர்களுக்கு மஞ்சள் அங்கி கிடையாது

கொழும்பு, செப் 10

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் பிக்குகள் விடுதலையானவுடன் அவர்களுக்கு மஞ்சள் அங்கிகள் வழங்கப்படக் கூடாது.

கண்டி விகாராதிபதிகள், தர்மகர்த்தாக்கள் சங்கம் இந்த வேண்டுகோளை அரசுக்கும் நிக்காயாத் தலைவர்களுக்கும் விடுத்துள்ளது. (இ-எ)

## நுணாவிலில் வரவேற்பு

சாவகச்சேரி, செப்.10

சர்வதேச சமாதான சேவை இயக்கப் பிரதிநிதிகளுக்கு நுணாவில் மேற்கு அறவழிச் சிறுவர் கழகம் வரவேற்புபசாரம் அளித்துக் கௌரவித்தது.

வடபகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களைப் பார்வையிட வந்த மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த செல்விடோறிஸ், திரு. காஸ்ரன், இங்கிலாந்தைச் சேர்ந்த செல்வி ஜோய் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் செல்வன் து. கலானந்தன் தலைமையில் இடம்பெற்ற இவ்வரவேற்பில் அறவழிப் போராட்டக் குழுவின் செயலாளர் திரு. க, ஜீவகதாஸ், தலைவர் திரு. வி. எஸ். துரைராசா, திரு. சண்சாளிதாஸ் ஆகியோரும் பொது மக்களும் சமூகமளித்துச் சிறப்பித்தனர். (இ-31)

# அம்பாறைப் பகுதியில் சிங்கள அதிகாரிகள்

அம்பாறை, செப். 10

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் பகுதிகளுக்கு மீண்டும் சிங்கள உயர் நிர்வாக அதிகாரிகளும், மற்றும் திணைக்கள அதிகாரிகளும் தமது உத்தியோக பூர்வக் கடமைகளுக்காக வருகை தரத் தொடங்கியுள்ளனர்.

இந்த மாவட்டத்திலுள்ள அரச நிர்வாக திணைக்கள உயர் அதிகாரிகளில் பெரும்பாலானவர்கள் சிங்களவர்களேயாவர்.

நாட்டின் அமைதியற்ற சூழ்நிலை காரணமாகவும், போராளிகள் பற்றி அவர்கள் கொண்டிருந்த 'கிலி' காரணமாகவும் இந்த அதிகாரிகள் சில வருடங்களாக தமிழ், முஸ்லிம் பகுதிகளுக்கு வர அச்சம் கொண்டு இருந்தனர்.

கராஜ்களுக்குள் முடங்கிய அரச திணைக்கள வாகனங்களும் தற்பொழுது மெல்ல,மெல்ல தலைகாட்டத் தொடங்கியுள்ளன. (ஓ-14)

# விடுதலையாகும் தமிழருக்கு பாதுகாப்புக் கொடுங்கள்

## இந்தியத் தூதருக்குத் தந்தி

மட்டக்களப்பு,செப்10

பூஸா, பெல்வத்தை உட்பட தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையாகும் தமிழ் அரசியல் கைதிகளை இந்திய அமைதி காக்கும் படையினரின் பாதுகாப்புடன் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கோரிக்கை அடங்கிய தந்தியை மட்டக்களப்பு காந்தி சேவா சங்க செயலாளர் திரு. கதிர் பாரதிதாசன் இந்திய தூதுவர், அமைதி காக்கும் படையின் தளபதி ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி பூஸாவிலிருந்து விடுதலையான மட்டுநகர் வாசிகள் 77 பேர் எவ்வித பாதுகாப்பும் இன்றி திருமலையிலிருந்துஇ.போ.ச பஸ்ஸில் அனுப்பி வைக்கப்பட்டதையும் அவர் அத்தந்தியில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-21)

## நெடுந்தீவில் களவு

நெடுந்தீவு, செப் 10

நெடுந்தீவில் முகமூடி அணிந்த திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

திரு. பெனடிற் என்பவரது கடையில் ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான பொருள்களுடன் மற்றும் 1500 ரூபாவும் களவாடப்பட்டுள்ளன. (இ-ரி)

# தமிழ்ப்பகுதிகளில் புதிய சிங்களக்குடியேற்றங்களை எதிர்க்கின்றோம்

## சம நீதி இயக்கத்தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் செப்10

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின் தமிழ்ப்பகுதிகளில் புதிய சிங்களக்குடியேற்றங்கள் அமைவதை நாம் எதிர்க்கிறோம்.

பாரம்பரியமாக தம்முடைய பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் தான் மீண்டும் தங்களுடைய பழைய இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும்.

இனங்களுக்கிடையே யான சமநீதி இயக்கத்தின் தலைவர் திரு சாள்ஸ் அபயசேகரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செவ்வாய் மாலை மேற்படி இயக்கம் யாழ்ப்பாணம்ஞானம்ஸ் ஹோட்டலில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தியது.

செய்தியாளர் மாநாட்டில் இயக்கத்தின் செயலாளர் ஹெட்லி டி சில்வா மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் திரு பாலசுப்பிரமணியம் திரு. கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

திரு. ஹெட்லி டி. சில்வா மேலும் பேசுகையில் கூறினர்.

இலங்கை பன்முக சமூக அமைப்புகளைக் கொண்ட நாடு இங்கு வாழும் மக்கள் எல்லோரும் சமத்துவமாக வே வாழவேண்டும்.

இந்நாட்டு மக்களுக்கு பாரம்பரிய பிரதேசங்களில் சுயாட்சி வழங்கப் படவேண்டும் இதையே எமது இயக்கம் 1979 ஆம் ஆண்டு முதல் வலியுறுத்தி வந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்பட வேண்டுமே ஒழிய இராணுவத்தீர்வு சாத்தியமில்லை. இதனை நாங்கள் பலமுறை வலியுறுத்தி வந்தோம்.

இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தை ஆதரிக்கும் அதேவேளையில் அதில் உள்ள சரத்துகள் எல்லாம் பூரணமாக நடைமுறைப் படுத்தப் படவேண்டும்.

நாங்கள் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

பயங்கரவாத சட்டத்தின் கீழ் வெலிக்கடை பூஸா சிறைகளில் இருந்த தமிழ் இளைஞர்களின் வழக்குகளில் அவர்களுக்கு சட்ட உதவிகள் வழங்கி வந்துள்ளோம்.

தற்போதும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்வது சம்பந்தமாக ஆராயவே நாங்கள் யாழ்ப்பாணம் வந்திருக்கிறோம். இப்படி அவர் கூறினர். (இ-ஈ)

## இலக்கிய விழாவில் இன்று...

யாழ்ப்பாணம், செப்.10

ஊரெழு மீனாட்சி அம்பாள் ஆலய மகோற்சவ இலக்கிய விழாவில் இன்று மேன்முறையீட்டு வழக்காடு மண்டபம் நடைபெறும்.

முதல் நாள் வழக்காடு மன்றத் தீர்ப்பை எதிர்த்து திரு. இ. ஜெயராஜ், திரு. மகேஸ்வரன் ஆகியோர் வழக்குத் தாக்கல் செய்வர். புலவர் ஈழத்துச் சிவானந்தன், திரு. தி. திருநந்தகுமார் ஆகியோர் எதிர்வாதம் செய்வர்.

திரு. க. வீரகத்தி நீதிபதியாகக் கடமையாற்றுவார். (ஓ - கு)

## பூசைகள் ஆரம்பம்

காங்கேசன்துறை, செப். 10

வலி.வடக்கில் பூசைகள் இன்றி மூடிக்கிடந்த ஆலயங்கள் பலவும் தற்போது மீண்டும் திறக்கப்பட்டு பூசைகள் ஆரம்பமாகியுள்ளன.

வலி.வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சுமார் 30 சைவ ஆலயங்களும் சுமார் 10 கிறிஸ்தவ ஆலயங்களும் பூசை, ஆராதனைகள் இன்றி மூடிக்கிடந்தன. (ஓ-68)


**ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் தேவை**

நன்கு தமிழ் தெரிந்த ஆங்கில மொழி பெயர்ப்பாளர்கள் தேவை. எமது நிறுவனம் மூலம் சிறந்த ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட உத்தேசித்துள்ளோம். நல்ல அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும். நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

**நிர்வாகி**
காந்தி தமிழ் வெளியீட்டுக் கழகம்

விளம்பர இல:- 201
மே/பா உதயன்,
தபால் பெட்டி எண்:- 23
யாழ்ப்பாணம்.

**உங்களுக்கு வசதியாக**

**உதயன் கருமபீடம்**

உதயன் - சஞ்சீவி
பத்திரிகைகளின்
விளம்பரதாரர்கள்
செய்தியாளர்கள்
விநியோகஸ்தர்கள்
மற்றும் அபிமானிகளின் வசதி கருதி
யாழ்-பஸ் நிலையத்துக்கு அருகே
207, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள

'ஷப்று' நிதி நிறுவனத்தில்
உதயன் கருமபீடம்
09-09-1987 தொடக்கம் இயங்குகிறது.

விளம்பரம் செய்ய விரும்புகிறீர்களா?

உதயன்-சஞ்சீவி செய்தியாளர் தந்துவிட்ட கடிதத்தை ஒப்படைக்க வேண்டுமா?

விநியோகம் சம்பந்தமாக விளக்கம் அறிய வேண்டுமா?

கைலாச பிள்ளையார் கோவிலடி அலுவலகத்துக்கு வரவேண்டும் என்பதில்லை.

பஸ்ஸிலிருந்து இறங்கியதும் 5 விநாடிகள் நடந்து சென்று உதயன் கருமபீடத்தில் உங்கள் அலுவலை முடித்துக்கொள்ளலாம்.

உதயன் அலுவலகம் தூரத்தில் இருக்கிறதே என்ற சலிப்பு வேண்டாம்.

உதயன் கருமபீடத்தில் உங்கள் கருமங்களை சுலபமாக முடித்துக் கொள்ளலாம்.

**உதயன் கருமபீடம்**
'ஷப்று' அலுவலகம்
207, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்.

# பிரயாண ஒழுங்குகள்

☆ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எம்மிடமுண்டு

**A. American Company (JEDDHA)**

1. 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சாப்பாடு இருப்பிட வசதியுடன், சம்பளம் 500 SR
2. 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் Cleaners சாப்பாடு இருப்பிடவசதியுடன் சம்பளம் 350 SR

☆ தெல்லிப்பழை, கட்டுவன், ஏழாலை, காங்கேசன்துறை மக்களின் வசதிக்காக எமது காங்கேசன்துறைக் காரியாலயம் வழமையான இடத்தில் நடைபெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்! ☆

**B. ★ லெபனுன் ★ CLEANERS**

1. ★ ஆண்கள் 18 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச் சம்பளம் 3500/- (சாப்பாடு, இருப்பிடவசதியுடன்)
2. ★ பெண்கள் 18 வயதிற்கு மேற்பட்டோர் அடிப்படைச் சம்பளம் 2500/- (சாப்பாடு, இருப்பிட வசதியுடன்)

**C. ★ IRAQ ★ Hospital Cleaners**

★ 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் இருப்பிட வசதியுடன் சம்பளம் 65 டினர்

☆ ஏற்கனவே பாஸ்போட் தந்தவர்களுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும். ☆

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

★ T. இந்திரநாதன் ★
☆ M 3 ரவல்ஸ் ☆
சற்குணவாசா (சோதிலேன்)
காங்கேசன்துறை.
(பஸ்வழி இலக்கம்:- 769)

★ T. இந்திரநாதன் ★
M. THREE TRAVELS
96, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தின் எல்லைக்குச் சென்று மீண்ட லலித் அத்துலத்முதலி

ஒரு கணம்-எனக்கு உதவியவர்கள், என்னுடன் சேர்ந்து துன்பம் அனுபவித்தவர்கள், என்னுடன் சேர்ந்து பணியாற்றியவர்கள், நான் நம்பும் இலட்சியங்களில் நம்பிக்கை வைத்திருந்தவர்கள் ஆகியோரை நினைத்துக்கொண்டேன்.

என்னுடன் அன்பாக இருந்த எல்லா இலங்கை மக்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்பினேன்.

> அண்மையில நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம் பெற்ற கிரனேட் தாக்குதலில் பயிரிழையில் உயிர் தப்பிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தான் பட்ட மரண வேதனையை விவரிக்கிறார் இதன் முதல் பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது. இரண்டாவது இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகிறது.

அதற்கு இப்போது வழி இல்லை. என்னால் செய்ய முடியாத விஷயங்கள் பற்றி நினைக்க எனக்கு நேரம் இருக்கவில்லை

என்னைப்பற்றி எல்லாரும் ஏன் நினைக்கின்றீர்கள்? இப்படி என்னுள் இருந்த சமூக உணர்வு கேட்டது.

என்னுள் இருந்த தார்மீக உணர்வு என் சிந்தனையைத் தடுத்தது பின்னர் அதுசொன்னது:

அவர்கள் உன்னைப் பற்றி என்ன நினைக்கின்றனர் என்பதல்ல இப்போது முக்கியமானது

உன்னைப்பற்றி நீஎன்ன எண்ணுகிறாய், உனக்காக நீ என்ன செய்யப் போகின்றாய் என்பது இப்போது முக்கியமாக உள்ள விஷயம். எனது வாழ்க்கைப் பயணத்தில் இப்படிப் பல தரம் இடம் பெற்றிருக்க வேண்டும்- இப்படி சமயம் எனக்குத் தெரிவித்தது.

ஆகவே இது புதிதல்ல. இதை நான் முன்னர் ஏற்றுக் கொண்டேன். இப்போதும் ஏற்றுக் கொண்டிருக்கின்றேன்

முடிவு நெருங்கி வரக் கூடும். பயமோ, வேதனையோ இல்லை.

உரத்த சத்தங்கள் திடீரென்று என்னைத் திடுக்கிட வைத்தன.

தவறான பாதை ஊடாக என்னை ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல என் கார்ச் சாரதி முயற்சித்தார். ஆனால் அது தடைப்பட்டது

சட்டவிரோத வழியாகக் கௌரவமாகச் செல்ல முயன்றதால் ஏற்பட்ட குழப்பம் தான் இது.

'சரியான வழியில் செல்வோம்.' — இப்படி நான் மெதுவாகச் சொன்னதாக ஞாபகம்.

சட்டத்துக்குப் பணிந்து நடக்கும் ஒழுங்கு என்னை விட்டு நீங்கவில்லை என்பதை நான் எனக்குள்ளே எண்ணிக் கொண்டேன்.

திரும்பி சரியான பாதையில் அவசரமாகச் சென்றோம். அப்போது சைகைகள் என் மனதில் அவசரமாகத் தோன்றின.

### சாவைப் பற்றிய சிந்திப்பு

முடிவு இயற்கை என்று எண்ணிக் கொண்டேன். சாவைப் பற்றிச் சிந்திப்பது தவிர்க்கமுடியாதது. ஆனால் உயிருடன் இருந்தேன். இருந்தேன் என்றால் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தேன் என்பதுதான் அர்த்தம்.

இறந்து விடுவது என்பதல்ல.

அறிவுபூர்வமாக இறப்பை ஏற்றுக்கொண்டு விட்டேன். உணர்ச்சிபூர்வமாக, உடல் ரீதியாக, உளரீதியாக உயிருடன் இருக்க முயற்சித்துக் கொண்டிருந்தேன். திடசித்தம் என்னுள்ளே பரவியது.

ஆஸ்பத்திரியை அடைந்தேன். அங்கு குழப்பம் நிலவியது ரஞ்சித் என்னைச் சரியான இடத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

எல்லா விஷயத்திலும் ஒழுங்கைக் கொண்டு வருவதாக அவரின் பிரசன்னம் இருந்தது

என்னைச் சுற்றி நின்றவர்கள் எல்லோரும் என் உயிருக்காகப் போராடினார்கள்

சூரியகாந்தியின் குரல் எனக்குக் கேட்டது என் மாணவனின் மனைவி என்பது என் நினைவுக்கு வந்தது.

கென்னத். சிறிது நேரத்தின் பின்னர் யோகா ஆகியோரின் குரல்கள் கேட்டன.

என் உயிருக்காக அவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள்.

நானும் என் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தேன் என்பது மட்டும்தான் எனக்குத் தெரிந்தது.

'லலித், குணமடையப் போகின்றீர்' — இப்படி ரஞ்சித் சொன்னது எனக்கு இலேசாக நினைவுக்கு வந்தது. அவர் அதைச் சொல்லியிருக்கத் தேவையில்லை. எனக்குத் தெரியும் நான் சரியாகப் போகின்றேன் என்பது

### போராட்டம்

என்னைச் சுற்றி இருந்தவர்கள் நம்பமுடியாத வேகத்தில் இயங்கினார்கள். அவர்களுடன் சேர்ந்து நானும் போராடினேன்.

தங்களை அர்ப்பணித்து உத்வேகத்துடன் அவர்கள் போராடினார்கள். அந்தளவு போராட்டத்துக்கு நான் தகுதி படைத்தவன் அல்லன். அவர்களின் பணி பரவலான மதிப்பைப் பெற்றது.

எனக்குப் புத்துயிர் கொடுக்கப் பல பொருள்களினால் என்னை அவர்கள் குத்தினார்கள்.

பிரதி, நன்றாசப்பிந்தி, விழுந்து விட்ட நாடிக்குப் புத்துயிர் கொடுக்கின்றார்கள் என்பதை உணர்ந்தேன்.

எனது மனம், தெளிவாக இருந்தும் கூட இது எனக்குத் தெரியவரவில்லை.

எனது அறியாமையை அந்த ஒன்று தான் உணர்த்தியது.

நான் படுக்கையில் இருந்தேன். டாக்டர்கள் விவாதித்துக் கொண்டிருந்தனர். இரண்டு விதமாக யோசித்துக் கொண்டிருந்தனர். எனது வயிற்றைச் சோதித்தார், யோகா.

வேதனை இருக்கின்றதா? என்று என்னைக் கேட்டார். 'வேதனை இல்லை அசௌகரியம் தான்'— என்று சொன்னேன்.

இச் சந்தர்ப்பத்திலும் அலசி ஆராயும் பழக்கத்தை என்னால் கைவிட முடியவில்லை

யோகாவுக்கு இது பூரணமான பதிலாக இல்லை.

திடீரென்று சிறிமானி தோன்றினார்,

அவரிடம் கேட்கப்பட்டது; ஒப்புதல் பெறப்பட்டது.

### சத்திர சிகிச்சை

மீண்டும் யோகா சோதித்தார்.

வேதனை இருக்கின்றதா? என்ற கேள்விக்கு நான் 'ஆம்' என்று பதிலளித்தேன். ஒப்புதல் தருகின்றீர்களா?— இப்படி யோகா கேட்டார்.

சத்திர சிகிச்சைக்குத் தயாரா என்ற கேள்வி இது என்பது எனக்குத் தெரிந்தது இதற்குச் சம்மதம் தெரிவித்த போது இன்னும் பலவற்றுக்குச் சம்மதிக்கின்றேன் என்பது எனக்குத் தெரிந்தது.

சத்திர சிகிச்சை அறைக்கு என்னைக் கொண்டு சென்றார்கள். 'குளிராக இருக்கின்றது' — என்று சென்னத்துக்குச் சொன்னேன்.

மயக்க பருந்துடன் நான் நினைவிழந்து கொண்டிருந்தேன்.

ஒவ்வொரு சட்டத்திலும் போராட நான் திடங் கொண்டேன்.

எப்போதும் உயிரைக் கையளிக்க முடியாது; அதை எம்மிடம் இருந்து பறித்தெடுக்கத்தான் முடியும்.

(முற்றும்)

# ஆலயங்கள் மூலம் தமிழ் இலக்கியங்களை வளர்ப்பது சிறப்பு

**இ. ஜெயராஜ்**
(அமைப்பாளர்: அகில இலங்கை கம்பன் கழகம்)

ஆலயங்கள் கலை இலக்கியங்களைப்போற்றி வளர்க்கும் பொது நிலையங்களாகப் பண்டு தொட்டு பணியாற்றி வந்துள்ளன.

ராஜராஜ சோழன் தஞ்சைப் பெரும் கோயிலைக் களமாகக் கொண்டு நாட்டியம் முதலான கலைகளை வளர்த்தான்.

பெரியபுராணம் முதலான இலக்கியங்கள் கோயில்களிலேயே அரங்கேறியதும், ஆலயங்கள் கல்வி நிலையங்களாகவும், கலைக் கூடங்களாகவும் விளங்கியதும் வரலாறு.

இதனால் பாரம்பரியமான கலை இலக்கியங்களும் இவற்றின் மூலம் உணர்த்தப்படும் அடிப்படைத் தர்ம நியாயங்களும் மக்கள் மனதில் வழிவழியாக விதைக்கப்பட்டு வந்தன.

இன்றும் தென் இந்தியாவில் பல ஆலயத் திருவிழாக்களில் தரமான இலக்கிய நிகழ்ச்சிகளும் கலைநிகழ்ச்சிகளும் நடந்து வருகின்றன.

ஈழத்து ஆலயங்களைப் பொறுத்த வரையில் திருவிழாக்கள் பெரும்பாலும் களியாட்ட விழாவாகவே அமைந்து வந்தன.

எமது சமூகத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் இவ்வேளையில் ஆலய விழாக்களும் பயனுடையவையாக வேண்டும் என்ற விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு ஊரெழு அருள்மிகு மீனாட்சியம்பாள் தேவஸ்தானம் இம்முறை திருவிழாவின் மாலை நிகழ்ச்சிகளைத் தரமான இலக்கிய விழாவாக அமைத்துள்ளது பாராட்டுக்குரியது.

இப்புதிய முயற்சிக்கு ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ பா. கிருஷ்ணசாமிக் குருக்களும், தமிழ்ப் பேரறிஞர் திரு. க. வீரகத்தி அவர்களும்

(5 ஆம் பக்கம் பார்க்க)



## இலவசம்!
## விளம்பரம் ஒன்று இலவசம்!!
**துரிதமாக விற்க! வாங்க! மாற்றீடு செய்ய!!**

**இந்த அரிய சந்தர்ப்பம் சில நாட்களுக்கே! ஒரு செலவில் இரு விளம்பரங்கள்!!**

கல்வி, பிறந்தநாள் வாழ்த்துக்கள், விற்பனை, தேவை, மணப்பந்தல், காணி விற்பனை, வேலைவாய்ப்பு இவைகளில் எவையாயினும் புதன், ஞாயிறு உதயன் ''சின்னஞ்சிறு விளம்பர''ப் பகுதியில் விளம்பரப்படுத்துவதன்மூலம் அதிக பயனடையுங்கள்.

★ நீங்கள் செய்யவேண்டியது இதுவே:

1. உங்கள் விளம்பரத்தை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சலுகைக் கட்டணக் கூப்பனில் எழுதுங்கள்.
2. சொற்களைக் கணக்கிட்டுச் செலவைக் கணியுங்கள்.
3. பூர்த்திசெய்த விண்ணப்பத்தையும் பணத்தையும், விளம்பரப் பகுதி: நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட், 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சமர்ப்பியுங்கள்.

★ இந்தக் கூப்பனில் பதியப்பட்டு பணம் செலுத்தப்பட்ட ஒவ்வொரு விளம்பரமும் இலவசமாக மீள்பிரசுரிக்கப்படும். இச்சலுகை 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும்.

**எமது விளம்பரக் கட்டணம்:**

| | |
|---|---|
| முதல் 20 சொற்கள் | ரூபா 15-00 |
| மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் | 50 சதம் |
| (ஆகக் கூடிய சொற்கள் 35) | |

★ ''மேற்பார்த்து'' குறிப்புடைய விளம்பரங்களுக்கு விளம்பர முழுச் கட்டணத்துடன் ரூபா 10-00 மேலதிகமாக அறவிடப்படும். விளம்பரதாரர்கள் நேரடியாகக் காரியாலயத்துக்குவந்து கடிதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**சின்னஞ்சிறு விளம்பரம் உதயன் சலுகைக் கட்டணக் கூப்பன்**

பிரசுரிக்க வேண்டிய திகதி:-..........

பகுதி:-..........

இலவசமாக மறுபிரசுரம் செய்ய விரும்பும் திகதி:-..........

பெயர்:-..........

விலாசம்:-..........

சொற்கள்:..........செலவுத் தொகை:..........

திகதி.-..........

..........
கையொப்பம்



## இடைக்காலத்தீர்வு ஒரு தற்காலிக ஓய்வு

# மக்களை அரசியல் மயப்படுத்தி போராட்டத்தைத் தொடருவோம்

### வாசுதேவா கூறுகிறார்

> ''புளொட்'' இயக்கத் தலைவர்களில் ஒருவரான இரா. வாசுதேவா எமது மட்டக்களப்புச் செய்தியாளருக்கு அளித்த பேட்டி இது.

இலங்கை- இந்தியா இரு நாடுகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஜே ஆர் - ராஜீவ் செய்துகொண்ட இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். இதனை நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்காதுவிட்டாலும் ஒப்பந்தம் நிச்சயம் அமுலுக்கு வந்திருக்கும்.

இந்த ஒப்பந்தத்தை நாம் இடைக்காலத் தீர்வாகவே கருதுகிறோம். இது பற்றி நாம் அறிந்திருக்கவில்லை. எமது கருத்துக்கள், அபிப்பிராயங்கள் கோரப்படவில்லை.

பண்டா - செல்வா ஒப்பந்தத்திலுள்ளவாறு வடக்கு, கிழக்குத் தமிழரின் பாரம்பரிய பூமியாகக்கூட இந்த ஒப்பந்தத்தில் அங்கீகரிக்கப்படவில்லை.

இம் மாகாணங்கள் சரித்திர காலம் தொட்டு இலங்கை தமிழ் பேசும் மக்களின் குடியிருப்பாக இருந்து வந்துள்ளன

நாம் தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளுக்கு நிரந்தரத் தீர்வையே விரும்பினோம். ஆனால் இது நிரந்தரத் தீர்வல்ல இடைக் காலத் தீர்வு. ஆனால் இதன் மூலம் மக்களுக்கு நிம்மதி அமைதி மட்டுமன்றி இனப்படுகொலையும் நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையை அமெரிக்க ஊடுருவலிலிருந்து தடுப்பதற்காகவே இந்தியா இந்த ஒப்பந்தத்தைச் செய்துள்ளது.

### போராட்டம் ஓயாது

எமது போராட்டம் ஓயமாட்டாது. ஆனால் போராட்ட அமைப்பு மாறுபடும். மக்களை அரசியல் மயப்படுத்திப் போராட்டத்தைத் தொடருவோம். அதிகாரம், ஆட்சி அல்ல எமது நோக்கம். எமது மக்களுக்காகச் செய்யக் கூடியவற்றைச் செய்வோம்.

மக்களை அரசியல் மயப்படுத்த சகல தேர்தல்களிலும் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து கூட்டாகக்கலந்து கொள்வோம்.

நாம் தேர்தலில் பங்குபற்றுது விட்டால் ஆயுத முனையில் இடம் பெற்ற அடக்கு முறைகள் ஆட்சி அதிகாரத்திலும் இடம் பெறலாம்.

இடைக்கால சபையைப் பொறுத்தவரை இது அதிகாரம் இல்லாத சபை. தேர்தல் நடைபெறும் வரை இதுசெயல்படும். இதில் எந்த ஒரு குழுவுக்கும் 1 அல்லது 2 உறுப்பினர் கூடுவதில் ஆட்சேபனை இல்லை எமக்கு ஒரு அங்கத்துவம் கிடைத்தால் அதனை கிழக்கு மாகாண முஸ்லிம் ஒருவருக்கே வழங்குவோம்

முஸ்லிம்கள் மத ரீதியான கலை, கலாசாரங்களை உள்ளடக்கிய தனித்துவமான சமூகம். தனித்தேசிய இனமல்ல. சிங்கள பேரினவாதம் எம்மை அடக்கியதால் நாம் தனி தேசிய இனமாக உருவாக்கப்பட்டோம். தமிழ் பேரினவாதம் முஸ்லிம்களை அடக்குமானால் அவர்கள் தேசிய இனமாக வளர்ந்து வரலாம். இத்தகைய ஒரு சூழ் நிலையை நாம்உருவாக்கக்கூடாது. நாம் அவர்களை அணைத்து செயல்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு இணைப்பு காரணமாக தமது விகிதாசாரம் குறையலாம் என்று முஸ்லிம்கள் சந்தேகிக்கின்றனர். அதாவது 33 சத விகிதாசாரம் 17 ஆகக் குறையலாம் என அவர்கள் கருதுகின்றனர். நாம் நியாய பூர்வமாக அணுகி அவர்கள் தனித்துவம் பாதிக்கப்படாத வகையில் செயல்பட வேண்டும்.

இணைப்புச் சம்பந்தமாக கிழக்கு மாகாண தமிழர்களுக்கும் சந்தேக

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் திருமுகம்

### இருதய நோயாளிகளின் அவலம் நீங்குமா ?

யாழ் போதனா வைத்தியசாலையில் தற்போது பல வார்ட்டுகளும் திறக்கப்பட்டு வருகின்றன. பல வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர்கள் தங்கள் கடமைகளை மேற்கொள்ளுகிறார்கள். ஆனால் போதியளவு இருதய சிகிச்சை நிபுணர்கள் இல்லாதகாரணத்தால் என் போன்ற இருதய நோயாளிகள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அவலம் எப்போது நீங்கும்?

தற்போதைய நிலையில் இருதய நோயாளிகள் கொழும்பு சென்று சத்திரசிகிச்சைசெய்ய முடியுமா? அங்கு சென்றாலும் அரசாங்க வைத்தியசாலையில் கடமைபுரியும் சிங்கள ஊழியர்கள் தமிழ்மக்களாகிய எங்களை அன்புடன், கடமை உணர்வோடு உபசரிப்பார்களா?

திறமை படைத்த தமிழ் வைத்திய அதிகாரிகள், சத்திரசிகிச்சை நிபுணர்கள், குறிப்பாக இருதய நிபுணர்கள் இருந்தும் ஏன் தமிழ்ப்பகுதிகளில் இவர்கள் கடமை புரிய மறுக்கிறார்கள்?

எனவே என் போன்ற பல இருதய நோயாளர்களின் நிலைமையைக்கருத்தில் கொண்டுயாழ் போதனா வைத்தியசாலைக்கு பொறுப்பானவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து இருதயசத்திரசிகிச்சை நிபுணர்களை அழைத்துஎமது நோயைக் குணப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

அளவெட்டி. நா. வடிவேல்



### பொய்யாமொழி

**குறள்:**
கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து.

**பொருள்:**
குடிகளை வருத்தும் தொழிலை மேற்கொண்டு முறையல்லாத செயல்களைச் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதிக்கு

# வெளிநாட்டு விதை கிழங்கை பெற்றுத் தாருங்கள்

## விவசாயிகள் கேட்கின்றனர்

பலாலி, செப். 10
இதுவரை காலமும் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்படைந்த வடபகுதி விவசாயிகள் தமக்குத் தரமான வெளிநாட்டு விதை உருளைக்கிழங்கைப் பெற்றுத் தருமாறு யாழ் அரசாங்க அதிபரையும், விவசாய உத்தியோகத்தர்களையும் கேட்டுள்ளனர்.

உருளைக்கிழங்கு உற்பத்தியில் அதிகளவில் ஈடுபடும் வலிகாமம் வடக்கு, கிழக்குப் பகுதி மக்களே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

நுவரெலியாவில் வைத்து இதுவரைகாலமும் உள்ளூர் விதை உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டு வடபகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.

இந்த உள்ளூர் விதை கிழங்கு தரமற்றதாகவும் 'பங்கஸ்' தொற்று அதிகளவில் கொண்டதாகவும் காணப்பட்டது.

இதனால் விளைச்சலில் அதிகளவில் வீழ்ச்சியும், நிலத்தில் புதுவகை நோய்களை உண்டுபண்ணும் 'பங்கஸ்' கிருமிகள் நிரந்தரமாகப் பரவுதலும், விவசாயிகளுக்குப்பெரும் 'தலையிடி'யை ஏற்படுத்திவந்ததுடன் நிரந்தர விவசாயப் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியிருந்தது

உள்ளூர் விதை கிழங்கினால் இவ்வகைத் 'திட்டமிட்ட விவசாயப் பாதிப்பு'க்களில் இருந்து வடபகுதி விவசாயிகள் விடுபட்டுக்கொள்ள நுவரெலியாப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படுவது போன்று தமக்கும் வெளிநாட்டில் இருந்து 'ஆக்கா', 'டிசிறி' வகைக் கிழங்குகளை இறக்குமதி செய்து வழங்கவேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-119)

# இலங்கை, இந்தியா இரண்டு அரசுகளுமே பூச்சாண்டி காட்டுகின்றன

## திலீபன் சொல்கிறார்

கிளிநொச்சி, செப். 10
கிழக்கு மாகாணத்தில் அத்துமீறிய குடியேற்றம் நடந்துகொண்டிருக்கிறது. வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை. ஆனால் ஒப்பந்தம் அமுல் நடத்தப்படுகிறது என்று பூச்சாண்டி காட்டுகின்றன இலங்கையும், இந்தியாவும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. திலீபன் அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் திரு. மூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திலீபன் மேலும் கூறியதாவது:-

இந்திய- இலங்கை ஒப்பந்தம் இரத்த சிவப்பின் மேல் பூசப்பட்ட வெள்ளைச் சாயம். இதனை வெளுக்கவைக்க மக்கள் தயாராகவுள்ளனர். ஜூலை 29 இல் ஏற்பட்ட ஒப்பந்தம் தமிழ் மக்கள் பிரச்சினை பற்றிச் செய்யப்பட்டது என்று சிலர் சொல்கிறார்கள். ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்காது.

இந்தியா ஒரு வல்லரசு, இந்துமா சமுத்திரத்தில் அமெரிக்கா கூட இந்தியாவை வெல்ல முடியாது. இந்தியா எமக்கு உதவுவதாகக் கூறி அழிவுப் பாதைக்கு வித்திட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார். (ஒ-76)

## தாலிக்கொடி அபகரிப்பு

காங்கேசன்துறை செப்10
தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் வழிபாடு முடித்து வீடு திரும்பு வழியில் ஒரு பெண்ணின் கழுத்தில் இருந்து ஒன்பது பவுண் நிறையுடைய தலிக்கொடி இனந்தெரியாதவர்களால் அபகரிக்கப்பட்டது.

திருமதி. சின்னத்தம்பி மாணிக்கம் (42வயது) என்னும் பெண்ணே தாலிக்கொடியை இழந்தவராவர். (இ 68)

## மருதங்கேணியில் கடைகள் உடைத்துக் கொள்ளை

தாளையடி செப் 10
இந்திய இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள கடைகள் இரவு நேரத்தில் இனந்தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்படுகின்றன.

பருத்தித்துறை கிழக்கில் உள்ள மருதங்கேணிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள இந்திய இராணுவ முகாமுக்கு சமீபமாக மருதங்கேணிச் சந்தியில் உள்ள மூன்று கடைகள் உடைக்கப்பட்டுள்ளன.

இக் கடைகள் மருதங்கேணி இந்திய இராணுவ முகாமிலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் அமைந்துள்ளன.

இந்த கடைகளில் ஒன்றில் இருந்து இந்திய நாணய நோட்டுக்கள், பவுடர், சிகரெட், பிஸ்கட் வகைகள், சோடாக்கள், உட்பட பல ஆயிரம் ரூபாய்கள் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தேநீர்க்கடை ஒன்றையும் கொள்ளையர்கள் உடைத்துள்ளனர். அவர்கள் உள்ளே சென்ற சமயம் அதற்குள் படுத்திருந்த தேநீர்க்கடை உரிமையாளரான திரு, தோபியாஸ் என்பவர் சத்தமிட்டுக்கொண்டு வெளியே வந்த சமயம் கொள்ளையர்கள் ஓடித் தப்பிவிட்டார்களாம்

கொள்ளைச் சம்பவங்கள் பற்றி இந்திய இராணுவத்தினரிடம் கடை உரிமையாளர்கள் முறையிட்டபோது. இராணுவத்தினர் பருத்தித்துறையில் உள்ள இந்திய இராணுவ முகாமில் இது பற்றி முறையிடும்படி தெரிவித்ததாகத் தெரியவருகிறது (இ-144)

## கொள்ளைகளைக் கண்டித்து வழிமறிப்பு

கிளிநொச்சி, செப்.10
கிளிநொச்சி வட்டக்கச்சி கிராமத்தில் நடைபெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்களைக் கண்டித்து திங்கட்கிழமை வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் கடை அடைப்பு, வழிமறிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இராமநாதபுரம், வட்டக்கச்சி வர்த்தகர் சங்கர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த வழிமறிப்புப் போராட்டத்தினால் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிக்கான சகல போக்கு வரத்துக்களும் பாதிக்கப்பட்டன.

பொதுமக்கள் நடமாட்டமும் வெகுவாகக் குறைந்திருந்தது (இ-67)

# வடமராட்சி புனரமைப்பு: உலக வங்கி உதவும்

வடமராட்சி, செப்.10
வடமராட்சியில் பாடசாலைகள், வைத்தியசாலைகளை புனர் நிர்மாணம் செய்வதற்கான நிதி உதவியும், பாதிக்கப்பட்ட மீனவர், மற்றும் விவசாயிகளுக்கு குறைந்த வட்டியிலான கடன்வசதிகளும் செய்து தரப்படும்.

இவ்வாறு வடமராட்சிக்கு விஜயம் செய்த உலக வங்கிக் குழுவினர் உறுதி அளித்தனர்.

இவர்களுடன் யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. ரி குலசேகரம், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஓஸ்டின் பெர்னாண்டோ, பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. என். நடராஜா ஆகியோரும் வந்திருந்தனர்.

இக்குழுவினர் ஆதி கோவிலடிப் பகுதியைப் பார்த்து தமது கவலையைத் தெரிவித்தனர்.

அங்கு பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து தம்மாலான உதவிகளை வெகு விரைவில் செய்து தருவதாக அவர்கள் உறுதியளித்தனர்.

குறிப்பாக மீனவர்களுக்கு குறைந்த வட்டியிலான கடன் உதவிகளையும், மீன்பிடி உபகரணங்களையும் தாம் உலக வங்கியிடம் தெரிவித்து பெற்றுத் தருவதாகக் கூறினர்.

''நாங்கள் இங்கு ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பீடு செய்யவே வந்துள்ளோம். எவ்வளவு நிதி வழங்கப்படும் என்பது பற்றி உலகவங்கியின் உயர் அதிகாரிகள் தான் முடிவு எடுப்பார்கள் என்றும் அவர்கள் கூறினர் (இ-ஒ-160)

# ஆளும் கட்சிக்குள் பிளவு ஏற்படும் ஆபத்து

## பிரதி அமைச்சர் அச்சம்

கொழும்பு, செப். 10
இந்திய - இலங்கை ஒப்பந்தம் குறித்து ஐக்கிய தேசியக்கட்சியில் பிளவு ஏற்படும் என்று நான் அஞ்சுகின்றேன்

பிரதி உள்நாட்டமைச்சரும் வெலிபட எம். பி யுமான திரு.பெர்சி சமரவீர முன்கண்டவாறு தெரிவித்தார்.

'திவயின' கொழும்பு சிங்கள நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு சமரவீர இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது;

ஒப்பந்தம் குறித்து கட்சித் தலைவர்கள் மத்தியில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுள்ளது.

சிரேஷ்ட தலைமைத்துவ மட்டத்தில் பொது அணுகுமுறை ஒன்று காணப்படவேண்டும். அதில் தவறும்பட்சத்தில் யு. என். பி யில் பிளவு ஏற்படும் சாத்தியம் உண்டு.

ஒப்பந்தம் குறித்து அரசுத் தலைவர்கள் ஒரே கருத்தைக் கொண்டிருக்கின்றார்களா? என்பதை சாதாரண மக்கள் மட்டும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## விளையாட்டரங்கு

உதைபந்தாட்டம்:

# யாழ்-குருநாகல் அணிகள் சனியன்று மோதுகின்றன

யாழ்ப்பாணம், செப். 10
நாளை மறுதினம் 12 ஆம் திகதி மாலை 4-15 க்கு யாழ் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து குருநாகல் மாவட்ட அணியினர் மோத உள்ளனர்.

இவ்வாட்டம் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

முன்னாள் பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபரும் முன்னாள் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவருமாகிய திரு. ஈ. கனகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

நீண்டகாலத்தின் பின்னர் இங்கு தென்னிலங்கைக் கோஷ்டி ஒன்று வருகிறது.

இந்தப் போட்டிக்கான யாழ் அணியினை தேசிய பயிற்றுவர் ஏ. எஸ். குணரத்தினமும் எஸ், எம். மாட்டினும் பயிற்சிகளை நடத்தி தயார் படுத்தி வருகின்றனர்,

யாழ் உதைத்பந்தாட்டச் சங்கத்தினரால் நடத்தப்படும் போட்டிகளில் மத்தியஸ்தம் வகிக்க விரும்பும் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களும்பயிலுனர்களும் யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் குழுச் செயலாளர் திரு எஸ். தாசீசியஸ் உடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

சூரியகுமார் ஞாபகார்த்தக் கிண்ண

# மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெறும்

யாழ்ப்பாணம், செப். 10
இணுவில் கலைஒளி மன்றம் தனது 22வது வருட நிறைவைக் கொண்டாடு முகமாக யாழ் இந்துக் கல்லூரியின் தலைசிறந்த கிரிக்கெட் வீரரும் வங்கி முகாமையாளருமான அமரர்சூரியகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மென்பந்து கிரிக்கெட் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

20ஓவர்களைக்கொண்ட 11 பேர் கலந்து கொள்ளும் இப் போட்டிகள் 'நொக்கவுட்' அடிப்படையில் நடத்தப்படும்.

இப் போட்டிகளில் சர்வதேச ஒருநாள் ஆட்ட விதிகள் பின்பற்றப்படும். நடுவர்கள் கலை ஒளி மன்றத்தால் நியமிக்கப்படுவார்கள்.

இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ள போட்டிகள் சனி, ஞாயிறு தினங்களிலும் மற்றைய விடுமுறைத் தினங்களிலும் நடைபெறும்.

ஏற்கனவே பல விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ள இச் சுற்றுப் போட்டியின் விண்ணப்பம் அனுப்புவதற்கான கடைசித் திகதி 12-9-87 ஆகும்.

கடந்த 5 வருடங்களாக நடத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் கலை ஒளி மன்றம் இரு தடவைகளும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், சென்ரலைட் விளையாட்டுக் கழகம், வளர்மதி விளையாட்டுக் கழகம் ஆகியவை தலா ஒவ்வொரு தடவையும் வெற்றி பெற்றதாக கலை ஒளி மன்ற முக்கியஸ்தர் சத்தியன் தெரிவித்தார்.

இந்தச் சுற்றுப் போட்டியைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலேயே முதல் தடவையாக சிறந்த கிரிக்கெட் வீரர் சோடியை தெரிவு செய்யும் போட்டியைநடத்த உள்ளதாகவும் இப் போட்டி பற்றிய முழு விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் சத்தியன் தெரிவித்தார். (ஒ-7-ச)

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி, செப் 10
நுணாவில் மேற்கு அறவழிப் பாலர் பாடசாலை அபிவிருத்திச் சபையின் விசேட கூட்டத்தில் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளை இம்மாதம் 15 ஆம் திகதி நடத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்தி தொடர்பாகத் தலைவி திருமதி சு. கணேசமணி தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் சிறப்புரை வழங்கினார். (ஒ-31)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரகாவியம் படைத்தவர் மில்லர்

## நினைவு தினக் கூட்டத்தில் பேச்சு

வடமராட்சி, செப் 10
தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரகாவியம் ஒன்றைப் படைத்துவிட்டுச்சென்று விட்டார் மில்லர்

எமது விடுதலைக்காக எதிர்காலத்தில் ஆயிரம் ஆயிரம் மில்லர்கள் தோன்றுவார்கள். இது நிச்சயம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு. குமாரப்பா கூறினார்.

கரும்புலி மில்லரின் நினைவு தினமும் உருவப் படத் திரை நீக்க விழாவும் அண்மையில் திரு. ஈ.டி.தங்கராசா தலைமையில் துன்னாலை தாமரைக் குளத்தடியில் நடைபெற்றது

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போதே திரு குமரப்பா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வடமராட்சியில் 'ஒப்பறேஷன் லிபறேஷ'னின் போது ஐந்து நாட்கள் நாம் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் தீவிரமாகப் போராடினோம்.

ஆனால் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பல்லாயிரக் கணக்கான இராணுவத்தின் தாக்குதலாலும் அவ்ரோ விமானங்கள், பொம்மர்கள் போன்றவற்றின் பாரிய தாக்குதல்களினாலும் அவர்களால் ஒரு தற்காலிக வெற்றியை அடைய முடிந்தது.

ஆனாலும் அது ஒரு வெற்றி அல்ல என ஸ்ரீலங்கா இராணுவ அதி உயர் அதிகாரிகளே பகிரங்கமாக ஒப்புக் கொண்டனர்.

இக்கால கட்டத்தில் தான் கரும்புலி இயக்கம் தோற்றுவிக்சப் பட்டது முதல் கரும்புலியாக சப்டன் மில்லர் போர்க்களம் புகுந்து வீரகாவியம் படைத்தான்.

இதனால் ஸ்ரீலங்கா இராணுவமும் ஸ்ரீலங்கா அரசும் நடுநடுங்கத் தொடங்கின.

இதன் பின்னர் ஸ்ரீலங்கா அரசு இந்தியாவின் காலடியில் விழுந்து ஓர் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து இரவோடு இரவாக இந்திய இராணுவத்தையும் கொண்டு வந்து குவிக்கச் செய்தது.

எமது ஆயுதங்களைப் பறிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப் பட்டது.

நாங்கள் தோல்வியின் நிமித்தம் ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை தமிழ் மக்களின் நலனுக்காகவும் இந்திய அரசின் மேல் வைத்துள்ள அபிமானத்தின் பேரினாலுமே ஒப்படைத்தோம்.

எனினும் எமது இலட்சியம் தமிழீழமும் தமிழீழத்தை அடையும்வரை எமது போராட்டம் வேறு வடிவில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார் கூட்டத்தில் மற்றும் பலரும் உரையாற்றினர்.

## மக்கள் முகம்

### திருப்பணிச் சபை நிர்வாகிகள்

கொக்குவில், செப். 10
கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா ஆலய திருப்பணிச் சபையின் நடப்பு வருட நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- ஏ. சி. வேலாயுதபிள்ளை உப தலைவர்கள்:- நா. நித்தியானந்தன், பொ. நடராசா செயலாளர்:- க துளசிகாமணி உபசெயலாளர்:- சு பரமேஸ்வரன் பொருளாளர்:- பொ. பத்மநாதன் உப பொருளாளர்:- க. குமணன்.

பரிபாலனசபை அங்கத்தவர்கள்:- சு பாலசிங்கம், மா. தங்கலிங்கம், மா. கனகரத்தினம், த இந்திரன், கணக்காய்வாளர் இ. பிரபாகரன். (ஒ-69)

### 34 பேருக்கு கடனுதவி

சாவகச்சேரி, செப் 10
மட்டுவில் தெற்கு மாதர் முன்னேற்றச் சங்க உறுப்பினர்கள் 34 பேருக்கு உலக தரிசன நிறுவனம் தலா 500 ரூபா வீதம் கடனுதவி வழங்கியது.

சங்கத் தலைவி திருமதி எம். செல்லையா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கிராம சேவையாளர் திரு. பொ. திருநாவுக்கரசு இதற்கான காசோலைகளை வழங்கினார். (ஒ-31)

# புனர்வாழ்வு விடயத்தில் கிழக்கு ஒதுக்கப்படுகிறது

## தேவா கவலை

மட்டக்களப்பு, செப். 10
புனர்வாழ்வு, உதவி வழங்கும் விடயங்களில் பாகுபாடு காட்டப்படுகிறது.

உதவி வடக்கு, கிழக்கிற்கு எனக் கூறப்படுகிறது. கூடுதல் உதவி பெறவேண்டியவர்கள் கிழக்கு மக்களே ஆனால் எல்லாம் வடக்குக்குத் தான் போகின்றன. வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கூட வடக்குக்குத் தான் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

— இவ்வாறு கவலை தெரிவித்தார் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம்.

கடந்த திங்கள் இரவு மட்டக்களப்புக் கச்சேரியில் அரசு உயர் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு இணைப்பு என்ற விடயம் பிரசாரத்திற்கு மட்டுமே [illegible] இது. ஆனால் உதவிகள் முழுவதும் அங்கு தான் செல்கின்றன. ஆனால் அரசு ஒருபோதும் பாரபட்சம் காட்டமாட்டாது என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

சட்டத்திற்கு தாம் கட்டுப்பட்டவர்கள் அல்ல என போராளிகள் நினைக்கிறார்கள். எவராவது சட்டத்தை மீறினால் சட்ட நடவடிக்கையின் கீழ் கொண்டுவரப்படுவார்கள்.

அன்று துப்பாக்கியால் மிரட்டினார்கள். இன்று துப்பாக்கி இன்றியும் மிரட்டுகிறார்கள். இதனை [illegible] அனுமதிக்க முடியாது.

—இவ்வாறு அவர் கூறினார். (ஒ-21)

# அரசு ஆயுதபலத்தைக் காட்டினால் நாமும் ஆயுதம் ஏந்த நேரிடும்

## ஈ. பி. ஆர் எல். எவ் பிரமுகர் கூறுகிறார்

அம்பாறை, செப். 10
ஆயுதங்களை நாம் நிரந்தரமாகக் கீழே வைக்கவில்லை. தொடர்ந்து நாம் ஜனநாயக பூர்வமான போராட்டத்தை நடத்துவோம், அதை அரசு ஆயுத பலத்தால் தடுத்து நிறுத்த முற்படுமானால் மீண்டும் எமது ஆயுதப்போராட்டம் தொடரும். எமது எதிர்கால நிலைப்பாடு இதுதான்;

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் ஆலோசகரும், மத்திய குழு உறுப்பினருமான திரு. வரதராஜப் பெருமாள் மேற்கண்டவாறு கூறினார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கிராமிய ஒருங்கிணைப்புச் செயலகம் ஒன்று சம்மாந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த வீரமுனை கிராமத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த செயலக திறப்பு விழா வைபவத்தில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்சண்டவாறு கூறினார்.

திரு க. சபாநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் திரு. வரதராஜப் பெருமாள் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

எமது இலட்சியப் போராட்டத்துக்காக ஈழத்தமிழ்மக்கள் செய்த தியாகங்கள் அளப்பரியனவாகும். இவ்வளவு அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும் மத்தியில் இன்று கிடைத்திருக்கும் தீர்வு பெரிதான ஒன்றல்ல!

புறச் சூழ்நிலைகள் இத்தற்காலிக தீர்வை ஏற்றுக்கொள்ள வைத்துள்ளது.

இன்று எமது நோக்கை அடையுமுன் ஆயுதங்களைக் கீழே வைத்துள்ளோம். இந்தியாவின் நிர்ப்பந்தம்தான் இதற்குக்காரணம் எனச்சிலர் கூறுகின்றனர்.

ஆனால் எமக்குள் ஒற்றுமை நிலவாமையே இத்தீர்வை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்ட காரணமாகும். இயக்க மோதல்கள் எம் மத்தியில் என்று தொடங்கியதோ

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தர்மத்தின் பலமே பலம். ஆயுதபலத்திலும் உண்மையின் பலமே உள்ளார்ந்த பலமாகும்.

—பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22078
10.9.1987  உ.பெ.இல: - 23


# வெட்கம், வெட்கம்; கோழைத்தனமானது!

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்த கொலைச் சம்பவம் கொடூரமானது; கோழைத்தனமானது.

இறை தொண்டு புரிவதற்காக, தெற்கிலிருந்து நெடுந்தூரமாக வடக்கே வந்த மதகுருவும் அவரது உதவியாளர்களும் சுட்டுக் கொல்லப்பட்டது காட்டுமிராண்டித்தனமான செயல். யாழ்ப்பாணத் தமிழர்கள் அனைவரையும் வெட்கித் தலைகுனிய வைக்கும் அவமானச் சம்பவம்.

யுத்தம் நின்று அமைதி வந்த பின்னரும் தமிழர்கள் கொலைஞர்களாகவே தொடர்கிறார்கள். ஆகையால் அவர்கள் ஈவிரக்கமில்லாத, மனித நேயம் இல்லாத மிருகக்கூட்டத்தினர். இவ்வாறு வெளி உலகம் யாழ்ப்பாணத் தமிழரை எடைபோடவும் எள்ளி நகையாடவும் இடம் கொடுத்திருக்கும் இழி செயல் அது.

தமிழர்கள் சுதந்திரத்துக்காகவும் விடுதலைக்காகவும் போராடவில்லை. அவர்கள் இரத்த வெறிபிடித்த இழிசனர். இவ்வாறாக அகில உலகமும் தூற்றுவதற்கு உடுவில் சம்பவம் இடம் கொடுத்திருக்கிறது. மாற்று இயக்கம் என நினைத்து அப்பாவிகள் கொலை செய்யப்பட்டார்கள் எனக் கூறுவதை உலகம் ஏற்கப்போவதில்லை! மாற்று இயக்கம் எனக் கூறி அப்பாவிகள் — நிராயுதபாணிகள் இவ்வாறு தான் தொடர்ந்து அழிக்கப்படமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

பகலில் மட்டும்தான் மனிதன் வீதிகளில் நடமாட வேண்டும் என்பதில்லை. தமது சொந்த அலுவல்களைக் கவனிப்பதற்காக இரவிலும் அவன் பயமின்றி நடமாடச் சுதந்திரம் வேண்டும். அந்தச் சுதந்திரம் தமிழ்ப் பகுதிகளில் இல்லாமற் போய்விடும் ஆபத்து உருவாகிறது என்பதற்கு உடுவில் சம்பவம் ஓர் உதாரணமா?

ஸ்ரீலங்கா இராணுவம் அப்பாவி மக்களைக் கொன்றது. மனித உரிமைகளை மீறி அடாவடித்தனம் புரிந்தது என்று கண்டித்தோம். தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, நசுக்குவதாகக் கண்டித்தோம்.

தமிழர் மத்தியில் இரத்தவெறி பிடித்த, இழுக்கைத் தேடித்தரும் கும்பல்களால் தனி மனித சுதந்திரம், ஏனைய மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றனவே! இது வெட்கத்திலும், வெட்கம்!

வீடுகளில் இருக்கும் போதும் சரி, வீதிகளால் செல்லும் போதும் சரி, இராணுவத் தாக்குதல்களால் எப்போது உயிராபத்து நேரிடும் என்ற பாதுகாப்பற்ற நிலையில் தமிழர் வாழ்வதாகக் கவலைப்பட்டோம்; கண்டித்தோம். இப்போது அதே கதியை தமிழ் இளைஞர்களில் சில ஆயுதக் கோஷ்டிகள் செய்து வருகின்றனவே! உனக்கு இல்லையடி; ஊருக்கடி கண்ணே உபதேசம் என்ற நிலைப்பாடா?

தமிழர்கள் எப்போதுமே பாதுகாப்பும், நிம்மதியும் இல்லாத கூட்டமாக வாழ வேண்டும் என்று விரும்பும் நாசகாரச் சக்திகள் செயற்படுகின்றனவோ என்று அஞ்சும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து வருகிறது. ஆட்கடத்தலும், கொலைகளும், கொள்ளைகளும் மலிந்து வருகின்றன.

மாற்றான் வந்து அடக்கி ஒடுக்கி, அழித்து ஒழித்த பின் மிஞ்சி இருப்பதையும் அழித்து ஒழிக்க தமிழ் இளைஞர் கும்பல்கள் போட்டி போடத்தொடங்கிவிட்டன. இதனால் ஏற்படக் கூடியஆபத்தை ''போதும் போதும்; வேண்டவேவேண்டாம்'' என்ற தலைப்புடன் கடந்த திங்கட்கிழமை இப்பத்தியில் விளக்கி இருந்தோம்.

தமிழ் மண்ணில் மீண்டும் பேரழிவு ஆரம்பித்துவிட்டது. இயக்க மோதல் என்ற பெயரில் அப்பாவிகளைக் கொன்றொழிக்கும் ஆபத்தும் நெருங்கிவிட்டது.

சமூகவிரோதிகளாக மாறும் தமிழ் இளைஞர் கும்பல்களை இனங்கண்டு அவற்றுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்திக்கொள்வதைவிட மக்களுக்கு வேறு மாற்றுவழி இல்லாமற் போகும் சூழ்நிலையே உருவாகிவருகிறது. சமுதாயத்தின் ஆக்கத்திற்கு உதவ வேண்டிய இளைஞர் சக்தி, அதன் அழிவுக்கும், அவமானத்துக்கும் பயன்படும் என்றால் மக்களது மனப்போக்கும், செயற்பாடுகளும் மாறுபடவே செய்யும். மக்களுக்குச் சுதந்திரம் பெற்றுத்தரவும், அவர்களைப் பாதுகாக்கவும் என்று புறப்பட்டவர்களே இரண்டையும் இல்லாமற் செய்ய முனையும்போது மக்கள் யாரிடம் போய் முறையிடுவது?

நாம் எம்மையே அழிப்பது என உறுதி பூண்டுவிட்டால், மாற்றான் - வெளியார் எவர் வந்தாலும் அதனை நிறுத்துவது மிகவும் கடினம். தமிழ்ச் சமூகத்தை அழிப்பதாக இளைஞர்கள் உறுதிபூணுதிருக்க அருள்பாலிக்குமாறு இறைவனை வேண்டுவோமாக.

ஆண்டவா! இனி எல்லாம் உனது பொறுப்பில்தான். தமிழ் இளைஞர்கள் அழியாதிருக்கவும், தமிழ்ச் சமுதாயத்தை அழிக்காதிருக்கவும் நீயே துணை புரியவேண்டுமப்பா!

# ராஜீவைக் கொல்லச்சதி முயற்சி!

மாஸ்கோ, செப் 9

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொல்ல மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பெரிய சதி முயற்சி ஒன்றைப் புலனாய்வுப் பொலீஸார் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இப்படி மாஸ்கோ வானொலி நேற்று அறிவித்தது.

அஸ்லாம் மாநிலத்தில் உள்ள மக்கள் விடுதலை இராணுவத்தின் தலைமைக்காரியாலயத்தில் வைத்து இச் சதித்திட்டம் திட்டப்பட்டது.

இந்தியாவின் வெளிநாட்டு ஆதரவு பெற்ற வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள தீவிரவாத சக்திகளும் இம் முயற்சிக்கு ஆதரவு வழங்கியிருந்தன.

இப்படிப் புதுடில்லிப் புலனாய்வுப் பொலீஸார் தெரிவித்தனர் என்று மாஸ்கோ வானொலி நேற்றுத் தெரிவித்தது. (இ-எ)

## வெளி உலகில்

# தமிழர் பிரச்சினை தீர்ந்து விட்டது

## ராஜீவ் கூறுகின்றார்

சென்னை, செப் 9

இலங்கைத் தமிழரின் பிரச்சினைகள் பெரும்பாலும் தீர்ந்துவிட்டன. பாளையங் கோட்டையில் வைத்து பிரதமர்ராஜீவ் காந்தி செவ்வாயன்று இதனைத் தெரிவித்தார்.

நிலைமை அமைதியாக உள்ளது. வழமைநிலைக்கு வாழ்க்கை திரும்பிவருகின்றது.

மக்கள் தங்கள் சொந்தக் கிராமங்களுக்குத்திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். பாதுகாப்பு உணர்வுடன் வாழ்கின்றார்கள்.

ஏற்கனவே 3 ஆயிரம் தமிழர்கள் விடுதலைசெய்யப்பட்டுவிட்டனர்.

உடன்பாட்டுக்கு மக்களிடையே மென்மேலும் ஆதரவு பெருகி வருகின்றது.

பௌத்த மதத் தலைவர்களும்உடன்பாட்டை ஆதரிக்கின்றார்கள்

—இப்படிப் பிரதமர் சொன்னார். (உ-எ)

# சீனப் பொலீஸ் மீது மனித உரிமை மீறல் குற்றச் சாட்டு

லண்டன், செப் 9

சீனப் பொலீஸார் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ் சாட்டியுள்ளது.

சீன அரசு மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு முயற்சிகள் எடுத்தும் சீனப் பொலீஸார் அரசு எதிர்ப்பாளர்களை சித்திரவதை செய்து வருகின்றது.

இப்படி லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் பலமாகத் தாக்கப்படுகின்றார்கள். மின்சார அதிர்ச்சிக்குள்ளாக்கப்படுகின்றார்கள். தனிமைச் சிறையில் வைக்கப்படுகின்றார்கள்— இப்படி அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டு உள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மீதான விசாரணைகள் துரிதமாக முடிக்கப்பட வேண்டும்; தாமதம் இன்றி அவர்கள் நீதியன்ற விசாரணைக்கு உட்படுத்த பட வேண்டும்— இந்த வேண்டுகோளை சர்வதேச மன்னிப்புச்சபை சீன அரசுக்கு விடுத்துள்ளது. (இ-எ)

★ஜீப்பைத் தாமே செலுத்திச்சென்று

# வரட்சி நிலைமையை பார்வையிட்டார் ராஜீவ்

சென்னை, செப். 9

பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ் நாட்டில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளை கடந்தசெவ்வாய்க்கிழமை பார்வையிட்டார். ஜீப்பைத் தானே ஓட்டியபடி பிரதமர் கிராமங்களுக்குச் சென்றார். ஜீப்பில் திருமதி சோனியா காந்தி, திருமதி மரகதம் சந்திரசேகர் ஆகியோர் இருந்தனர்.

கன்னியாகுமரிக்கு விஜயம் செய்த பிரதமர் காந்தி, கடலில் இறங்கி, தண்ணீரை எடுத்து தலையிலே ஒற்றிக் கொண்டார்.

அன்று மாலையே திருவனந்தபுரம் திரும்பிய பிரதமர் தனிவிமானம் மூலம் இரவு புதுடில்லிக்குச் சென்றார். (இ-எ)

# பங்களாதேஷ் எதிர்ப்பு

டாக்கா, செப். 9

சார்க் அமைப்பு இஸ்லாமிய நாடுகள் அமைப்பு ஆகியவற்றில் ஆப்கானிஸ்தானைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு பங்களாதேஷ் அரசு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றது.

இது குறித்து ஆதரவு தேட டாக்கா சென்ற ஆப்கன் குழுவைச் சந்திக்க பங்களாதேஷ் ஜனாதிபதி மறுத்துவிட்டார்.

டாக்காவில் ஒரு வாரகாலம் தங்கிய ஆப்கன் குழு ஏமாற்றத்துடன் காபூல் திரும்பியது. இஸ்லாமிய நாடுகள் அமைப்பில் 44 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

சோவியத் துருப்புகள் ஆப்கனுக்கு நுழைந்ததைத் தொடர்ந்து அந்த அமைப்பில் இருந்து ஆப்கானிஸ்தான் வெளியேற்றப்பட்டது.

சார்க் அமைப்பில் ஏழு தென் ஆசிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. (இ - எ

# முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்கும் என்பதைச் செயலில் காட்டுங்கள்

கொழும்பு, செப் 10

உங்கள் தலைமையில் முஸ்லிம் இனத்துக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குஉண்டு நீதி கிடைக்கும் என்று சொன்னால் மட்டும் போதாது; கிடைக்கும் என்பதை செயலில் காட்டியும் கொள்ள வேண்டும்.

## ஜனாதிபதிக்கு கலீல் கடிதம்

இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் அல்ஹாஜ் எம். சி எம். சலீல் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முன்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

கடிதத்தில் அவர் மேலும் கூறியிருப்பதாவது;

இலங்கை- இந்திய ஒப்பந்தம் தொடர்பாக தற்சமயம் இடம்பெற்று வரும் நடைமுறைகளில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக எமக்கு முறையிடப்பட்டிருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கல் பற்றி இந்திய அரசு அதிகாரிகளுடன் பேசும் இலங்கை அரசுக் குழுவில் ஒரு முஸ்லிம் பிரதிநிதி தானும் இடம்பெறாதது இப்புறக்கணிப்புக்கு மேலும் உரமூட்டுவதாக உள்ளது.

இப்படி டாக்டர்கலீல் கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கின்றார். (இ-எ)

## ஆளும்-

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது. என் பி எம். பிக்களே தெளிவாகக் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது.

ஒப்பந்தம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கொண்டு வரப்பட்டது. அதனால் அதற்கு ஆதரவளிக்கின்றேன்.

வடக்கு, கிழக்குஇணைப்பைத் துண்டிக்க வழி செய்யும் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படாவிட்டால் மலையகச் சிங்களவர் சார்பில் புரட்சி ஒன்றைத் தலைமைதாங்கி நடத்துவேன்.

இப்படி திரு. சமரவீர அப்பேட்டியில் தெரிவித்தார். (உ-எ)

## மட்டுவிலில் தர்மவாரம்

சாவகச்சேரி செப் 10

மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயத்தில் அதிபர் திரு. வே சண்முகநாதன் தலைமையில் தர்மவார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சிவாகமஞானசாகரம் சிவஸ்ரீ. கே. சோமசுந்தரக் குருக்கள் அருளுரை வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

ஆசிரியைகள் செல்வி. இ சின்னப்பு, திருமதி. இ வயிரமுத்து ஆகியோர் தர்மவாரம் தொடர்பாக உரையாற்றினர். (இ-31)

## ஆலயங்கள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தூண்டுகோலாக அமைகின்றனர்.

ஊரெழு இளைஞர்கள் முன்னின்று இந்நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளனர். ஒவ்வோர் ஆண்டிலும் ஒவ்வொரு இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்துச் சொற்பொழிவாகவும். பட்டிமண்டபம், வழக்காடு மண்டபம், கவியரங்கம்,மேன்முறையீட்டு வழக்காடு மண்டபம் முதலிய நிகழ்ச்சிகளாகவும் விழாவை அமைக்க இவர்கள்முடிவு செய்துள்ளனர்.

இம்முறை விழாவுக்கான இலக்கியமாகக் கம்பராமாயணம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 26-8-87 தொடக்கம் 12 நாட்கள் தொடர்ச் சொற்பொழிவுகளாக அமைந்து இன்று தொடக்கம் தொடர்ந்து நான்கு நாட்கள், அதாவது 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில் முறையே பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், கவியரங்கம், மேன்முறையீட்டு வழக்காடு மன்றம் என்பவை நடைபெற உள்ளன.

ஈழத்தின் தலை சிறந்த தமிழ் அறிஞர்கள் திரு க. வீரகத்தி, திரு. க. சொக்கலிங்கம், கலாநிதி இ. பாலசுந்தரம், திரு. க. உமா மகேஸ்வரன், கவிஞர் முருகையன், திரு சி சிவலிங்கராஜா, திரு. க நாகேஸ்வரன், புலவர் ஈழத்துச் சிவானந்தன், திரு. காரை. செ. சுந்தரம் பிள்ளை ச. வே. பஞ்சாட்சரம், கல்வயல் குமாரசாமி, பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை முதலான பெரியவர்கள் விழாவில் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

இப்புதிய முயற்சி அப்பகுதி மக்களுக்குப் பெரும் பயன் விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை மற்றும் ஆலயங்களிலும் இவ்விதமான விழாக்கள் [illegible] போகிறது.

# மூன்று மாதகால பிரசவ விடுமுறை வழங்கக் கோரிக்கை

பெண் அரசு ஊழியர்களுக்கு மூன்றுமாதப் பிரசவ விடுமுறை வழங்குவது பற்றி அவசரமாக முடிவு செய்யும்படி அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வைத்திய சங்கம் இக்கோரிக்கையை விடுத்தது.

தற்போது பெண் ஊழியர்களுக்கு ஆறுவார கால பிரசவ விடுமுறையே வழங்கப்பட்டுள்ளது.

இது தாய்மாருக்கு போதாது என்று வைத்திய நிபுணர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

குழந்தைகள் வைத்திய நிபுணர்களின் கருத்துப்படி, பிறந்த குழந்தைக்கு முதல் மூன்றுமாதங்கள் தாய்ப்பால் கொடுக்க வேண்டும் அதுவும் ஒழுங்கான இடைவேளைப்படி தாய்ப்பால் கொடுக்கப்பட வேண்டும்.

பிரசவித்த ஒரு தாய் ஆறுவாரகாலத்தின் பின்னர் வேலைக்குச் செல்லத் தொடங்கினால், குழந்தை தாய்ப்பாலைக் குடிக்கும் வாய்ப்பை இழந்துவிடும்; புட்டிப்பாலே கொடுக்கப்படவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

தனியார்துறை பெண் ஊழியர்களுக்கு மூன்று மாதப் பிரசவ விடுமுறையைதனியார் நிறுவனங்கள் வழங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## அரச ஆயுத---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றுடன் ஈழம் என்ற போராட்டமும் நின்றுவிட்டது.

எந்தவொரு இயக்கமும், மற்றொரு இயக்கத்துக்கு எதிராகத்துப்பாக்கியைத் தூக்கினால் அதற்கு எதிராக இனி மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் நாம் வெறும் ஈழத்துக்காக மட்டும் போராடவில்லை. அனைத்து மக்களினதும் ஜனநாயக உரிமைகளுக்காகவும், உண்மையான சமத்துவத்துக்காகவும் போராடுவோம். இந்தப் போராட்டம்தொடரும். அதுஜனநாயக பூர்வமானதாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு க. பத்மநாபா பேசுகையில்; இன்று நாம் எமது மக்களின் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுவருகின்றோம், இடைக்கால நிருவாகத்தில் எமது மக்களின் தேவைகள் நிறைவு பெறாது.

அனைத்து இயக்கங்கள் மத்தியிலும், ஒற்றுமைக்காக நாம் போராடுவோம். போராட்ட வடிவம் மாறினாலும், எமது குறிக்கோளை [illegible] மக்களின் மலர்வுக்காக [illegible]'' என்றார். (ஒ-14)

## (சமய சந்நிதிகளில்)

### முனியப்பர் சுவாமி கோயில் கும்பாபிஷேகம்

மானிப்பாய், செப். 9

சுன்னாகம் ஸ்ரீ முனியப்ப சுவாமி கோயில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை 11 ஆம் திகதி 6-25 மணிக்கு நடைபெறும்

நேற்று புதன்கிழமை கும்பாபிஷேகத்துக்கான கிரிகைகள் ஆரம்பமாகின. (இ-90)

### விக்கிரகங்கள் பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம், செப். 10

அருள்மிகு சேந்திவேம்படிஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானத்தில், புதிதாக விநாயகப் பெருமானதும். ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகளதும் விக்கிரகங்கள் பாலஸ்தாபனம் செய்து வைக்க அம்பாள் அருள்பாலித்துள்ளாள். இன்று வியாழக்கிழமை காலையிலிருந்து அம்பாளுக்கு விசேஷ பூசைகள், அபிஷேகங்கள் என்பன நடைபெற்று பி. ப. 1.00 மணிக்கும் 2 00மணிக்கும் இடையிலானசுபவேளையில் விநாயகப் பெருமானதும் ஸ்ரீ சிவசுப்பிரமணியரதும் பாலஸ்தாபனப் பூசை நடைபெறும். (இ)

### இராஜகோபுரம்

கொடிகாமம், செப். 10

அருள்மிகு மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி கோவிலில் இராஜகோபுரம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ 75)

### துர்க்கை அம்மன் இலட்சார்ச்சனை விழா

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான இலட்சார்ச்சனை விழா இம்மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 23 ந் திகதி புதன்கிழமை பூர்த்தியடையும்.

பிரதி தினமும் காலையும் மாலையும் பஞ்சவிம்சதி (25) கலச சங்காபிஷேகம், நியாயபூசை, இலட்சார்ச்சனை, வேதபாராயணம் தேவாரபாராயணம் ஆகியவை இடம்பெறும். (இ-31)

### இன்று பாலஸ்தாபனம்

எழுவைதீவு முத்தன்காடு அருள்மிகு ஸ்ரீமுருகப்பெருமான் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட விருக்கின்றது.

ஈழத்துத் திருச்செந்தூரான இங்கு இன்று காலை 9 மணிமுதல் 10.30 மணி வரையான சுபவேளையில் பாலஸ்தாபனம் நடைபெறும்.

சிவஸ்ரீ டா. வைத்தியநாதக் குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார்.

## மக்களை----

(3ம் பக்கத் தொடர்ச்சி)

முண்டு அதாவது தமது உரிமைகள் அழியலாம் என்று சிலர் கருதுகிறார்கள். சமூக, பொருளாதார அரசியல் ரீதியில் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படும். வடக்கு-கிழக்கு இணையாவிட்டால் கிழக்கு மாகாணம் சிங்கள மயமாகி விடும்.

மாகாணசபையைப் பொறுத்தவரை தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் சபையாக அது அமையாது இது வெறும் நிர்வாக சபையாகவே அமையும். அங்கம் வகிப்போர் சமூக, பொருளாதார, அரசியல் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் இதற்காகவும் நாம் மக்களை அரசியல் மயப்படுத்தல் வேண்டும்.

எதிர் காலத்தில் எமது போராட்டம்தொடரும். இலட்சியம் நிறைவு பெறும் நாளில் அது முடிவடையும். அதுவரை இடைக்காலத் தீர்வை தற்காலிக ஓய்வாக பயன்படுத்தி எமது மக்களுக்கு புனர்வாழ்வு மூலம் சமூக பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவோம்.

16 லட்சம் அமெரிக்க டாலர் பெறுமதியான ஆயுதங்களை இந்தியா எம்மிடமிருந்து பெற்றிருக்கிறது இதனால் தான் கடந்த காலங்களில் இயக்க மோதல்களைத் தவிர்த்துக் கொண்டோம் இராணுவ போராட்டத்திலும் விலகி நின்றோம். (இ-21)

### மின்சார இணைப்பு

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் ஆனைக்கோட்டை உப நிலையத்துக்குட்பட்ட பகுதியில் புதிதாக மின்சாரம் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ஒ-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பல வண்ணச் சேலைகள்
* அழகான பிளவுஸ் பீஸ்கள்
* சேட்டிங் சூட்டிங் புடைவைகள்
மற்றும்
* சகல றெடிமேட் ஆடைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்
மயூரா சென்ரர்
70, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

உதயன்

10 - 09 - 1987 வியாழக்கிழமை

* பல வண்ணச் சேலைகள்
* அழகான பிளவுஸ் பீஸ்கள்
* சேட்டிங் சூட்டிங் புடைவைகள்
மற்றும்
* சகல றெடிமேட் ஆடைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்
மயூரா சென்ரர்
70, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

# கோட்டைக்குள் பாதுகாப்புக்காக பாவிக்கப்பட்ட மின் பொருள்கள் எங்கே?

## அவற்றைப் பார்வையிடச் சென்ற அதிகாரிகள் அதிர்ச்சி

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையின் இருபத்தைந்து உப அலுவலகங்களில் இருந்து பெறப்பட்டு பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ்ப்பாணம் கோட்டை முகாமில் வைக்கப்பட்டிருந்த மின் பொருள்கள் அங்கு இல்லாததுகண்டு அதிர்ச்சி தெரிவிக்கப்படுகின்றது.

பல லட்சம் ரூபா பெறுமதியான அலுமினிய மின் கடத்திகள், பி வி சி வயர்கள், வீதி வெளிச்ச இணைப்புக்கள், பிரதான ஆழிகள் ஆகியன இம் மின் பொருள்களில் அடங்கும்,

இரண்டு வருடங்களுக்கு முன்னர் கோட்டை இராணுவத்திடம் இவைகள் கையளிக்கப்பட்டிருந்தன:

தற்போது ஏற்பட்டுள்ள அமைதி நிலைமையைக் கருத்தில் கொண்டு உப அலுவலகங்களில் பூரணப்படுத்தப்படாமல் உள்ள மின் விஸ்தரிப்பு வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க யாழ் அபிவிருத்திச் சபை தீர்மானம் எடுத்தது.

இதன்பிரகாரம் உயர் அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் கோட்டை இராணுவ முகாமிற்குள் சென்று பார்வையிட்டபோது மேற்கண்ட மின் பொருள்கள் எதுவுமில்லாதது கண்டு அவர்கள் ஏமாற்றத்தோடு திரும்பினர்.

யாழ்மாவட்டத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட புதிய முகாம்களில் மின்சாரவசதிகளை மேற்கொள்வதற்காக இம் மின் பொருள்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென அவ்வதிகாரிகள் தெரிவித்தனராம். (இ-16)

## நேற்று மேலும் 600 பேர் விடுதலை

கொழும்பு, செப். 10

பூஸா தடுப்பு முகாமில் இருந்து நேற்று மேலும் 600 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்சப்பட்டனர். காலித் துறைமுகத்தில் இருந்து இந்தியக் கப்பல் மூலம் இவர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இத் தொகுதியுடன் இதுவரை 2,500 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுவிட்டனர் என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

## எதுவித கட்டுப்பாடு---

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

அணிசேராக் கொள்கை இன்று இல்லை.

1971 கிளர்ச்சியின் போது எமது பொலீஸ் படையில் 12,500 பேர் இருந்தனர். இப்போது அந்த எண்ணிக்கை ஐம்பதினாயிரமாக அதிகரித்து விட்டது.

இலங்கைப் படைகளில் திரு. ஜெயவர்த்தன நம்பிக்கை இழந்து விட்டார். அதனால் தான் இந்தியப் படைகளைக் கொண்டு வந்திருக்கின்றார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் நூறுபேருக்கு ே. லானேரின் உயிர்கள் மீது தான் ஜனாதிபதி கையொப்பமிட்டார். ஒப்பந்தம் இலங்கைக்கு மட்டும் அல்ல, சிங்கள இனத்துக்கும் அழிவையே கொண்டு வரும்.

ஒப்பந்தத்தின் உண்மையான அம்சங்களை அரசு மறைத்து வைத்து விட்டது. மறைக்கப்பட்டதை வெளிப்படுத்தவே நாம் கூட்டங்களைநடத்தி வருகின்றோம்.

இப்படி அவர் சொன்னார். (இ-எ)

## சிகரெட்வான் கொள்ளை

வவுனியா, செப். 10

முல்லைத்தீவுக்குச் சென்று வியாபாரத்தை முடித்துக்கொண்டு திரும்பிய சிகரெட் வான் ஒன்றை வழிமறித்த ஆயுதந்தாங்கிய கோஷ்டி ஒன்று 46 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் கைக்கடிகாரம் ஒன்றையும் கொள்ளையடித்தது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்றரை மணி அளவில் புளியங்குளம்—முல்லைத்தீவு வீதியில் ஐந்தாம் கட்டைப் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

துவக்குகள் சகிதம் ஆயுத முனையில் வாகனத்தை வழிமறித்த 5 பேர் விற்பனையாளரையும், சாரதியையும் தாக்கினர். பின்னர் கொள்ளையை நடத்தினர் என்று விற்பனையாளரான திரு. பொன்னையா தர்மகுலசிங்கம் வவுனியா பொலீசில் முறையிட்டுள்ளார். (இ-164)

## 5 பெண்களை மணந்தவர் கைது!

கொழும்பு, செப். 10

ஒருவருக்கு ஒருவர் தெரியாமல் நான்கு பெண் டாக்டர்கள், ஒரு பெண் நிர்வாக அதிகாரி ஆகியோரைத் திருமணஞ் செய்து கொண்டுவாழ்ந்து வந்த ஒருவர் நுவரெலியாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இவர் மீது இவரின் மனைவிகளில் ஒருவர் சந்தேகம் கொண்டார். அதன் பலன் இன்னொரு மனைவியுடன் ஹோட்டலில் வைத்து பொலீஸாரால் இவர் கைது செய்யப்பட்டார்.

பத்திரிகை விளம்பரங்கள் மூலம் தான் ஐந்து பெண்களையும் இவர் திருமணம் செய்து கொண்டாராம்.

அரச சேவையில் நிர்வாக தர அதிகாரி என்று இவர் தன்னைக் கூறிக் கொண்டார்.

ஐந்து திருமணங்களிலும் இவர் நிறைய சீதனம் பெற்றுக் கொண்டார் என்பதும் விசாரணையில் தெரியவந்தது.

கம்பளை நீதிவான் இவரை இம் மாதம் 17ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும் படி உத்தரவிட்டார். (இ-எ)

## தண்ணீர் கேட்டு கடையை திறக்கவைத்த இளைஞர் திருட முயற்சி

### குருநகர் பகுதியில் சம்பவம்

குருநகர், செப். 10

இரவில் தண்ணீர் கேட்ட இளைஞர்கள் திருட்டு நடத்த எடுத்த முயற்சி கடைக்காரரின் துணிச்சலால் முறியடிக்கப்பட்டது.

இச்சம்பவம் செவ்வாய் இரவு 11 மணி அளவில் குருநகர் மவுண்கார்மல் வீதியில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

ஆர். அழகுராஜா பத்தர் (வயது 60) என்பவர் நகைத் தொழிலாளி.

இவர் தனிமையில் கடையில் தங்கி இருந்ததைத் தெரிந்த ஐந்து இளைஞர்களைக் கொண்ட திருடர் கோஷ்டி தண்ணீர் கேட்டு கடையைத் திறக்க வைத்தது.

பின்பு விளையாட்டுத் துப்பாக்கியைக் காட்டித் திருட்டை நடத்த முனைந்தது.

தன்னைக் கட்டிப் பிடித்து வாயைப் பொத்திய இளைஞன் ஒருவனை கடைக்காரர் தாக்கினார்.

''சத்தமிட்டால் சுட்டு விடுவேன்'' என்று இளைஞர் மிரட்டியபோது துப்பாக்கிக்கு கடைக்காரர் அடித்தார்.

துப்பாக்கி தூரப்போய் வீழ்ந்ததில இருந்து போலித்துப்பாக்கி என்று அவர் புரிந்துகொண்டு கடையை விட்டு வீதிக்கு வந்து சத்தம் போட்டார.

இளைஞர்கள் ஓடித் தப்பிவிட்டனர். (இ-51)

## ராஜீவுக்கும் ஜே. ஆருக்கும் என்றால்

# பிரபாவுக்கும் நோபல் பரிசு வழங்க வேண்டும்

### புலிகள் கருத்தரங்கில் உரை

ஊர்காவற்றுறை, செப். 10

''இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை உயர்ந்த ஒன்றாக கருதி அதற்கு மூலகாரணமாக இருந்த ராஜீவ் காந்திக்கும்ஜெயவர்த்தனவுக்கும் நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என உலகின் பல பாகங்களிலிருந்தும் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. அவ்வாறானால் தமிழீழ மக்களின் சுதந்திர உணர்வை அகிலஉலகத்துக்கும் பறைசாற்றிய வீரன் பிரபாகரனுக்கும் நோபல் பரிசு வழங்கப் படவேண்டும்''

புளியங்கூடல் சந்தியில் கடந்தவாரம் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய ஓய்வு பெற்ற அதிபர் திரு. தி. நடராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது-

வாக்குகளை எப்படி போடுவது? என்றுமட்டும் எங்களுக்கு கற்றுத் தந்த பழைய அரசியல் தலைவர்கள் இனிமேல் எங்களுக்குத் தேவையில்லை.

ஆயுதப்புரட்சி மூலம் இலங்கை அரசையும், உலக நாடுகளையும் கதிகலங்கச்செய்த விடுதலைப் புலி போராளிகள் எங்களை ஆளவேண்டும்.

அவர்கள்ஆட்சியில்தான் எங்களுக்கு விமோசனம் உண்டு -இப்படி அவர் கூறினார்.

அடுத்து உரையாற்றிய வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ப. சிவராசா கூறியதாவது:- இந்திய - இலங்கை ஒப்பந்தமானது இரு நாடுகளும் தங்கள் நலன்களைப்பாதுகாப்பதற்காக செய்து கொண்ட தற்பாதுகாப்பு பிரகடனமாகும் அதனால் தமிழ் மக்களுக்கு எதுவித பிரயோசனமுமில்லை இவ்வாறு அவர் தெரிவித்தார்-

திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம், திரு. இரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர்கள். (இ-16)

## ஈழவர் முன்னணி கண்டனம்

யாழ்ப்பாணம்,செப் 10

உடுவில் கொலைச்சம்பவங்களை ஈழவர் முன்னணி வன்மையாகக்கண்டித்துள்ளது.

''இந்தக் கொலைகள் எமக்குப் பெரும் பின்னடைவையும் எதிர்ப் பிரசாரத்தையுமே ஏற்படுத்தும்'' என்று இது சம்பந்தமான அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலையுண்டவர்களுக்கும், காயம் அடைந்தவர்களுக்கும் ஈழவர் முன்னணி தனது அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறது. (அ)

## யாழ் மாவட்ட விவசாயிகள் பென்ஷன் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 10

யாழ் மாவட்டத்தில் விவசாயிகளுக்கான பென்ஷன் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

5,000 விவசாயிகள் இத் திட்டத்தின் கீழ் நேற்றுப் பதிவு செய்யப்பட்டனர்.

யாழ் மாவட்டத்தில் 73 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் உள்ளன.

இப்படி யாழ் அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார். (இ-எ)

## வாடகை-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கம் என்ற 27 வயது மதிக்கத்தக்க, 4 பிள்ளைகளின் தந்தையான இறந்தவர் சூசைப்பிள்ளையார் குளத்தைச் சேர்ந்தவராவர்.

செவ்வாய்க்கிழமை காலையில் இவரது காரை வாடகைக்கு அமர்த்திக் கூட்டிச் சென்றவர்களே கொலைக்குக்காரணமாக இருக்கலாம் என்று வவுனியாப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகவும்மரண விசாரணைக்காகவும் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மூன்று நட்சத்திரக் குறிகள் இடப்பட்ட கையால் எழுதப்பட்டிருந்த குறிப்பில், ''தமிழ் மக்களின மகிழ்ச்சியான மறுமலர்ச்சியே எமது குறி'' எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கொலை தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலீஸார் மேற்கொண்டுள்ளார்கள். (இ-164)

## முகம்மது விஜயம் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

எதிர் வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரும் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது நவின் விஜயத்தை ஈழவர் முன்னணி பகிஷ்கரிக்கும்.

ஈழவர் முன்னணி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் மீதான பொருளாதார, போக்குவரத்து மற்றும் தடைகளையும், கொடுமையான சட்டங்களையும் திணிப்பதில் பங்குகொண்டவர் என்ற வகையிலேயே அமைச்சரின் விஜயத்தைப் பகிஷ்கரிக்குமாறு ஏனைய வெகுஜன அமைப்புகளையும், மக்களையும் ஈழவர் முன்னணி கேட்டிருக்கிறது.

# இலங்கை எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சிக்கு இந்தியா உதவும்

### கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்கூட்டத்தில் முடிவு

புதுடில்லி, செப். 10

இலங்கையில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சிப் பணிகளில் இந்தியாவும் கூட்டாகச் செயல்படும் இது விஷயத்தில் இரண்டு அரசுகளுக்கும் இடையே உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இப்படிச் சொன்னார் நிதி அமைச்சர் ரொனி டிமெல்.

இந்திய-இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் இரண்டு நாள் கூட்ட முடிவில் திரு.ரொனி டிமெல செய்தியாளர் மாநாட்டில் பேசினார். பேச்சுக்களில் காணப்பட்ட சில உடன்பாடுகளையும் நிதியமைச்சர் வெளியிட்டார்.

அவையாவன:-

* தேயிலை உற்பத்தி குறித்து கூட்டுச் சந்தை வாய்ப்பு ஒன்றை உருவாக்குவது,
* இலங்கையில் இந்தியத் தனியார் முதலீடுகளைச் செய்ய வசதிகள் செய்வது,
* இலங்கை எரிபொருள் தொழில் நுட்ப ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பது,
* இரு நாடுகளுக்கும் இடையே நல்லெண்ண வர்த்தகத் தூதுக் குழுக்களைப் பரிமாறிக் கொள்வது. (இ-எ)

## வடக்கு கிழக்கு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றும் தெரிகின்றது.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் தான் முஸ்லிம் எம். பி க்கள் சந்திப்பு நாளை இடம் பெறவுள்ளது. (இ-எ)

## ஸ்ரீலங்கா - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது பற்றி முதலில் இந்திய இராணுவத்திற்கு அறிவிக்கப்படுகின்றது.

இந்திய இராணுத்தினர் ஊர்காவற்றுறை கடல் பகுதிக்குச் சென்று இயந்திரப் படகில் வரும் ஸ்ரீலங்கா கடற்படையினரை அழைத்து வருகின்றனர்.

கடை வீதிக்குச்சென்று அவர்களுக்குத் தேவையான பொருள்களை கொள்வனவு செய்த பின்னர் பாதுகாப்பாக அனுப்பி வைக்கின்றார்கள்.

தற்போதுஇது வாராந்தம் நடக்கும் நிகழ்ச்சியாகி விட்டது எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள். (இ-16)

## ஆயுதப்படைப்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இழந்த படையினரைக் கௌரவிக்கு முகமாகத் தேசிய சின்னம் ஒன்று அமைக்கப்படும்.

திறமையாக போர்ப் பிராந்தியங்களில் பணிபுரிந்த பாதுகாப்புபடையினர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் படுர்வ.

பாதுகாப்புப் படையினர் எங்கு பணிபுரிந்தாலும் மாதம் 300 ரூபா விசேட அலவன்ஸ் பெறுவர்.

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். (இ-எ)

## தமிழ் இளைஞர்-..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியப் பிரிவு ஒன்றை நிறுவ முடிவுசெய்து, திட்டமும் வகுக்கப்பட்டு [illegible] பட்டு உழைக்கும் வட்டார [illegible] தெரிவித்தன. (அ-10)

## யாழ் நகரில்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராணித் தியேட்டருக்கு சமீபமாக இருக்கும் கூல் பார் ஒன்றில் 4 ஆயிரத்து 650 ரூபாவை கொள்ளை அடித்துச் சென்றனர்.

நேற்று அதிகாலை இச் சம்பவம் நடந்தது.

கூல் பாரில் இரு சிறுவர்கள் சம்பவம் நடைபெற்ற பொழுது நின்றனர்.

சைக்கிளில் வந்த பிரஸ்தாப இரு கொள்ளையர்களும் துப்பாக்கி, கிறீஸ் கத்தி ஆகியவற்றைக் காட்டி சிறுவர்களைப் பயமுறுத்தினர். பின்பு லாச்சியைச் சோதனை செய்து [illegible] 650 ரூபாவையும் எடுத்துக் கொண்டு சென்றனர். (இ-51)

## பொலீஸ்-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போர் பார்க்க முடியாத வகையில் காரின்கண்ணாடிகள் புசையூட்டப்பட்டுள்ளன.

ஐந்துகார்களுக்குமேல் யாழ் கோட்டை முகாமுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தியப் பொலீஸார் இந்த கார்களிலேயே வீதிகளில் ரோந்து புரிகின்றார்கள். (இ-10)

## மோட்டார் கார் டீசல் ஜெனரேட்டர்

சொந்தப் பாவிப்பிலுள்ள கீழ்க்காணும் மோட்டார் கார்களும், உதிரிப்பாகங்களும் டீசல் ஜெனரேட்டரும் விற்பனைக்குண்டு.

1. 9 ஸ்ரீ மொறிஸ் ஒக்ஸ் போர்ட்.
2. 3 ஸ்ரீ ,, ,,
3. மொறிஸ் ஒக்ஸ்போட் என்ஜின்
4. பே ஜோ றிம், ரயர்கள்
5. ''பெட்டர்'' 7 K. V. A டீசல் எலெக்றிக் ஜெனறேட்டர்

* எந்நேரமும் பொருள்களைப் பார்வையிடலாம்.
★ கூறுவிலைகளை எழுத்துமூலம் 30-9-87க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

மகப்பெறுவும் பிணிநீர்மனையும்
சந்தைச் சதுக்கம்,
சங்கானை.
(1508)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/8, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 10-09-1987ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd, 898/8 Navalar Road, Jaffna on 10 - 09 - 1987.

## நீத்தார் பட்டியல்

### விஜயலட்சுமி கந்தசாமி

8-9-87இல் காலமானார்

இவர் காலம் சென்ற வயித்திலிங்கம் கந்தசாமியின் ( Audit Dept. ) மனைவியும். சுரேஸ், சுவர்ணா, மோகன் ஆகியோரின் தாயாரும் பஞ்சாச்சரவேல் மோகன் அவர்களின் மாமியாரும், காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் புதல்வியும், கந்ததாஸ் (Malaysia), ரத்தினவேல் (Canada) பஞ்சாச்சரவேல், Dr. சண்முகதாஸ் (Canada), காலம் சென்ற நாகலிங்கம் சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் ஆவார். இறுதிக்கிரிகைகள் 10-9-87ல் 21, Ratnahara Place Dehiwala இல்லத்தில் நடைபெறும்.

தகவல்
நா. ஜெயரஞ்சிதன்
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org